உ

ஸ்ரீ சுப்ரமண்யஸ்வாமி துணை.



# ஸ்ரீ சிவவடுக பைரவ பஜநோத்ஸவ பத்ததி.

பிள்ளையார்பாளையம், மகா-ள-ள-ஸ்ரீ
V. குப்புசாமி அய்யரவர்கள்
குமாரன்
ஆபதுத்தாரணய்யரால்
ஸ்ரீ பைரவ சகாயத்துடன்
இயற்றப்பட்டு

மதுரை,
ஸ்ரீ ஜெகதாம்பாள் அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.

Copy Right Registered.

விலை] 1929. [அணா 8.

23 JUL 1929
Q23:417
M29
180255

23 JUL 1929

உ

ஸ்ரீ சுப்ரமண்யஸ்வாமி துணை.







# ஸ்ரீ சிவவடுக பைரவ

# பஜநோத்ஸவ பத்ததி.

பிள்ளையார்பாளையம், மகா-ள-ள-ஸ்ரீ

**V. குப்புசாமி அய்யரவர்கள்**

குமாரன்

ஆபதுத்தாரணய்யரால்

ஸ்ரீ பைரவ சகாயத்துடன்

இயற்றப்பட்டு

மதுரை,

ஸ்ரீ ஜெகதாம்பாள் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

Copy Right Registered.

லை] 1929 அணா 8.

# முகவுரை.

இப்பிரபஞ்சத்தின்கண் சகலரும் விரும்புவது உன்னதமான சுகானுபவமும், துக்க நிவர்த்தியுமே. சுகமடையும் பொருட்டு பூமி ஸ்த்ரீ புத்திரர் இவ்விதச் சிற்றின்பங்களின் தோற்றமாகிய ஐஸ்வர்யங்களையேதேடிச் சுகமடைந்ததாகவெண்ணித்திருப்தியடைந்து கானலை நீரென நினைத்தேங்கிக் கடுவெளியலையும் ஜீவராசிகள்போலேமாந்து துக்கத்தைச் சுகம்போல் நினைத்து அனுபவிப்பதே உலகம் அல்லது மாயை யென்று சொல்வதினுழல்வதாகும்.

இவ்வுலகம் அல்லது மாயையினின்றெழ விவேகமுந் தத்துவ விசாரமும் பூர்வ புண்ணிய பலத்தினுலொவ்வொரு ஜீவராசிகளுக்கும் எல்லாம்வல்ல இறைவன் றிருவருளாலமைக்கப்படுகிறது. சாதாரணமாகப் பயிர்களின் பலன் பூசாரத்தைப் பொருத்ததென்று யாவருஞ் சொல்லது வழக்கமாயிருக்கிறது.

என்னுடைய பூர்வ புண்ணிய பலத்தினுல் தெக்ஷண கைலாயமும், பூமி ஸ்வர்க்க அந்தரிக்ஷ க்ஷேத்ரமும், சாக்ஷாத் சர்வேஸ்வரன் பாதாள நடனமாடியதும், அம்பாள், சுப்ரமண்ய மிவர்கள் கடுந்தவம் புரிந்ததும் ஈஸ்வரன் அன்னையின் கடுந்தவத்தில் ஜோதி லிங்கமாக ஆவிர்பவித்ததும், தேனுடியொடு நூற்றெட்டு புண்ணிய தீர்த்தங்களுடன் கூடிய உன்னத லிங்காகாரமான மலையுடன் கூடியதும், மதுஹர, க்ஷேத்ரபால, த்ரிபுர, ரௌத்ர, காலபைரவமூர்த்தி, விசேஷ சந்நதி வாய்ந்ததும், பிரான்மலை யென்று பெயர் வழங்காநின்றதுமான இத்திவ்ய க்ஷேத்ரத்தில் ஜனனமாகக்கூடிய பெரும் பாக்கிய மெனக்குக் கிடைத்ததுந் தவிரப் பெற்றோர்களால், எனக்கிடப்பட்ட அபதுத்தாரணனெனும் நாமதேயத்திற்கிணங்க ஸ்ரீ பைரவ மூர்த்தியினிடத்திலவரருளாலேயே அன்பு மேலிட்டு சந்ததமும் பைரவ த்யானத்திலமிழ்ந் தானந்திக்கக்கூடிய நித்ய சுகானுபவ ஐஸ்வர்யத்தை யடைந்தேன்.

கலியுக மையாயிரத்திருபத்தேழில் பைரவ மூர்த்திக்குக் கபால மாலையொன்று சாற்றக்கூடிய பாக்கிய மெனது பெற்றோர்களா லெனக்குக்கிடைத்தது. அன்று முதல் ஸ்ரீ பைரவ மூர்த்தியின் ப்ரஸாதத்தால் பைரவ அக்ஷர மணமாலை, பைரவ தண்டகம், டுக் பைரவாஷ்டகம் ஆகிய இவைகளென்னுலியற்றப்பட்டு அச்ப்பட்டிருக்கிறது. மேலும் பைரவானந்தர் பாடல், உண்மை, சில கீர்த்தனைகள், பைரவத் திருப்புகழ், தத்வார்த்தசிந்தாமணி ஸம்ஸ்க்ருதத்தில் பைரவ ஸ்தோத்திரம் ஆகிய இவைகளும் பாட ஏற்பட்டன.

180255
சென்னை-600 008.



சில நண்பர்கள் இவ்விதமியற்றிய பாடல்களை அன்புமேவிட்டு விளையாட்டாக எனது க்ரகத்திலடிக்கடி பாடிவந்தார்கள். இவ்விதமிருந்து சொற்ப தினங்களிற் பைரவ ஆராதனையுடன் ப்ரதி சுக்கிரவாரமும் பஜனையுமேற்பட்டு நடந்துவருஞ் சமயத்தில் ப்ரும்ம ஸ்ரீ கடையநல்லூர், கேசவபாகவதரவர்கள் இச்சந்நிதியிற் பைரவ பஜனையாகவே நடத்தவேணுமென்றும் அதற்குத்தக்க பத்ததியமைக்கும்படியும் பலமுறை தூண்ட எனக்கு முன்னதாகவே இருந்த அவா மிக ஷை பத்ததியையும் பாடும்படிக்கான நாவன்மையை ஸ்ரீ பைரவக் கடவுளருளால் அடையப்பெற்றமைத்து ஷை பாஹவதரவர்களாலும், ப்ரும்மஸ்ரீ வேணுகானவைகுண்டமையரவர்களாலும் ராகதாளமமைத்துப் பரிசோதிக்கப்பட்டும் ஷை ஸந்நிதியிலிப்பத்ததிப் பிரகாரம் ஷை பாகவதர்கள் முதலிய பக்தகோஷ்டிகளினுதவியால் பஜனை நடத்தி வர, இக்ரந்தத்தை வெளியிட வேண்டுமென்ற சிலரின் வேண்டுகோளுக்கிணங்க, ஒரு கனவானின் பொருளுதவியால் "ஸ்ரீசிவவடுக பைரவ பஜனோத்ஸவ பத்ததி" யெனுமிப் புஸ்தகத்தை யச்சிட்டு வெளியிடத் துணிந்தேனென்றாலும் "மருந்தோடாயினும் விருந்தோடுண்" ணெனும் வாக்கியத்திற் கிணங்க சதுர்வித பல புருஷார்த்தமு மளிக்கத்தக்கவரும் முழுமுதற்கடவுளுமான ஸ்ரீ பைரவமூர்த்தியின் ப்ரபாவத்தையறிந் தாஸ்ரயித்தெல்லோரு மவரவ ரபீஷ்டத்தை யடையவேண்டுமென்ற வெனதவாவையும் பூர்த்தி செய்துகொண்டேன்.

தமிழ், தெலுங்கு, ஸமஸ்க்ருதமாகிய பாஷைகளில் சிறிதும் பாண்டித்யமில்லாத வென்னைக் கருவியாகக்கொண்டு இப்பத்ததியினாரம்ப குருவணக்கத்திலும், ஸரஸ்வதி காப்பிலுஞ் சொல்லிய ப்ரகாரம் அவனருள் வாக்காக வந்தியற்றப்பட்டதா லிதிலேதேனுமிலக்கண மிலக்கியப் பிழைகளிருந்து தெரிவித்தாலன்புடனேற்று அடுத்த பதிப்பில் சீர்திருத்தம் செய்ய மிக்க வுதவியாகும்.

இந்நூல் பண்டித பாமரரிருபாலருக்கு மெளிதில் பொருள் விளங்கும் வண்ண மிலகுபதங்களின் சேற்கையா லமைந்திருப்பதால் இகபர ஸாம்ராஜ்யமடைய ஸாதனமா யிருக்குமென்ற பூர்ண நம்பிக்கையுடன் பைரவக் கடவுளின் க்ருபையை முன்னிட்டு வெளியிடத் துணிந்தேன்.

குறிப்பு:—இப் புத்தகத்தின் கடைசியில் பிழை திருத்தங் காட்டப்பட்டிருக்கிறது.

70. பேச்சியம்மன் துரை ரஸ்தா, மதுரை

☞ K. ஆபதுத்தாரணய்யர்,
நேட்டிவ் டாக்டர்.

உ

ஓம்:

  

# ஸ்ரீ சிவவடுக பைரவ பஜநோத்ஸவ பத்ததி.

---

## குரு வணக்கம்.

ஆபதுத்தாரண னடுக்க வுகந்து தீவி
ரபக்தியதே புகட்டி யிருளொழிய ஞான
சீலனுமா யெடுத்தெளிதி லுபதேச சித்த
ரூலா வேசந்தாணி காண வென்னைக்
காரணமாகவி ராகம் பல பாடச்செய்
கனிமொழி தனிலுறை மகிழ்வீ றண்டி
மேதினியிற் றனித்தேவ னாக நின்ற
மகிமை குருவாம் பைரவனோர் துணை காண்.

---

## சரஸ்வதி காப்பு.

மாது சிரோமணி சரஸ்வதி நின்றநாவில்
மதுரம தாய்த்திரட்டி உருள்புளியில் மாயைத்
தீயதை வேரறுத்தெரிய மதியே தந்து
தூயாநீ சந்ததமு மான வுன்றன்
தேவசிகாமணி மாவடுக நாதன் கொள்
தனிகுண மகிமையை மகிழ்வா யாற்ற
நாகாமுந் தமிழ்பாஷை வேறெழுத்துஞ்
சமமெனவு மேசொல் லவளோர் துணைகாண்.

---

## கணபதி காப்பு.

விந்தையாய் யான்பாட வூற்றவிந் நாலதனில்
எந்தப் பிழையும் புகாவண்ணம் — தொந்தி
வயிறன் கணபதியே வேலேந்தி யேறும்
மயிலவன் மூத்தோனே கார்.

---

## சரஸ்வதி காப்பு.

வெண்டா மரைமே லிருந்துவீ ணைநாத
மெண்ணிடா கீதங்க ளாலேயும்—கிண் கிண்
ணென்றொலிக்க வீற்றிருக்கும் வாணியெம் மாதாநீ
யென்மதலைச் சொல்லால் மகிழ்.

கமலா சனத்தில்தூ வெண்பட்டு டுத்தி
விமல ரடிபணியு முன்றன்—நிமல
மகிமையை யெந்த னறிவிலெட்டா நின்ற
ஞெகிழியிணைப் போற்றுவம் பார்.

---

## பரமன்றுதி.

கைலைவா ஸீசாமா மீனாக்ஷி நாதா
மாலைவி சுவாசா மகேசத்—தலையி
லணியாப் புனிதா விபுதா சுதாமா
மணிச்சடையா சங்கரா கார்.

---

ஓம்.

சத்குரு பைரவாய நம :

# ஸ்ரீசிவவடுக பைரவ பஜநோத்ஸவ பத்ததி.

பைரவ நாமஸ்மரணம் (ஜயஜய பைரவா)
நமப்பார்வதிபதயே (ஹரஹர மஹாதேவ)
கோபிகா ஜீவனஸ்மரணம் (கோவிந்த கோவிந்த)
வல்லீ காந்த ஸ்மரணம் (ஜயஜய சுப்ரம்மண்யோம்)
ஜய புண்டரீகவரதா (ஹரிவிடல)

ஸ்ரீபைரவ பஜரே—மானஸ
ஸ்ரீபைரவ பஜரே -

பைரவ நாமஸ்மரணம் (ஜயஜய பைரவா)

## பைரவத்யானம்.

ரக்த ஜ்வால ஜடாதரம் சசிதரம்
ரக்தாங்கதேஜோமயம் த்ருக்வா
சூலகபால பாசடம ருங்லோகஸ்ய
ரக்ஷாகரம் நிர்வாணம் சுநவாஹனம்
த்ரிணயநம் ஆனந்த கோலாஹலம் வந்தே
பூதபிசாச நாதவடுகம் க்ஷேத்ரஸ்யபாலம் சிவம்.

(அஷ்டோத்ரக் கொத்து)

## பைரவன் துதி

நாயுற்றுங்கு கபால மாலை யணியா
மார்புற்ற ருத்ராங் கனை
நாகாபூஷண மண்டிப் பண்டுறவதாய்
நால் வேத னின்றுடி னேய்
நாக்குள் ளாழ்ந்திரு மங்களச்சிவ
னவன்றுனை மகா வீரனை

மா தாய் சாது வெனத்துதி
சுரபதி நின்றிடு காப்பானவா

சர்வ வல்லப தீக்ஷண்ய
சர்வ சித்தி ப்ரதாயக
சரண்யாய நமஸ்துப்யம்
பைரவாய சிதாத்மனே.

---

## தோடய மங்களம்.

நாட ராகம் - ஜம்ப தாளம்.

ஜெய பைரவா வருக ஜெய சிவா மனமுருக
ஜெய சிதானந்த வருக ஜெயசேவை தருக. (ஜெய ஜெய)

ஜெய சீல லாவண்ய ஜெய பக்த வரகண்ய
ஜெய ரஞ்சிதாகண்ய ஜெயஸஹ ஜன்ய. (ஜெய ஜெய)

வடுக வீருவேச வாடாத தபநேசா
கடுவுண்ட ஜகதீச கட்கமுள் ப்ரகாசா. (ஜெய ஜெய)

முக்தி தருமீசா உத்தம குணநேசா
பக்தி ப்ரியஈசா பக்தரிட வாசா. (ஜெய ஜெய)

ஞமலியி லுல்லாச நவிலும் சுப்ரகாச
நமனரி ஜகதீசா நன்றிவிசு வாசா. (ஜெய ஜெய)

நன்னீற பிஷேக நடனமிடும் விநோத
தென்கைலை யோக தெளிமுத்து வடுகா. (ஜெயஜெய)

காசிகா புரவாச காலபை ரவநேச
மாசிலா குணதாசர் மாவிதய வாசா. (ஜெய ஜெய)

காவலன்பு கொளீச காருண்ய குணஹாச
பாவனன் சிவாவேச பார்புகழு மீசா. (ஜெய ஜெய)

---

ராகம் - ஆரபி. திருபுட தாளம்.

சரணம் சரணம் சிவாங்க பைரவ
சரணம் ஸ்ரீ குரு பைரவா

சரணம் சாக்ஷிதி கம்பரேஸ்வரா
சரணம் பிரான்மலை வாசனே. (சரணம்)

அகமுளாழ்ந்திடு மடிகள் சந்ததம்
அடைய வந்துளம் மகிழ்ந்தனர்
ஸகஜ சாந்தமொ டாண்டருள்புரி
பாக்யமா மெச் சரிகயா. (சரணம்)

அகிலம் முழுவதும் மகிழ்வொடாடியும்
ஸகஜ நர்த்தன சமயமுள்
சுகிர்தம் நாடிட வரவு காண்பது
பாக்யமா மெச் சரிகயா. (சரணம்)

ஷண்முகசு கண பதியின் நாயக
சதுர்புஜாங்கமு ளேந்திய
மின்னுசூலமு மெஞ்சுமாலையும்
சாம்பலாடிய தேகனே
வருக பிரான்மலை நாயகா
ஸ்ரீகுரு ஜெக தாரகா. (சரணம்)

---

ராகம்:- மத்யமாவதி. தாளம் - ஆதி.

முரஹர நகதர முகுந்த மாதவா என்றமெட்டு.

ஹரஹர சிவஹர வகண்ட பைரவா
சுரபதி ஜகரக்ஷக தேவ தேவ
வரத வடுகவதி சங்கரனே சிவ
பரப்ரும்ம சொரூபா நமோ நமோ
பைரவ வடுகா நமோ நமோ—சுக
பிரான்மலை வாசா நமோ நமோ. (பைரவ)

துஷ்டநிக் ரகசுக சிஷ்ட பரிபால
கஷ்ட நிவாரண சுகுண சிவா
இஷ்ட சித்தி யேதந்திடும் தேவ மனோஹரா
பைரவ சுந்தரர் நமோ நமோ—சுக
பிரான்மலை வாசா நமோ நமோ. (பைரவ)

வானுற்ற மாண்புடை தேவார்ப் புதஜக
தீசனே சிந்தையி லாடு தேவா
நானுற்ற சோதரா மாசற்றஞமலி
வாகனப்ரியா நமோ நமோ. (பைரவ)

தேவா வழிபட தரிசனமே தந்து
தேடிய விமலதைத் தந்தசிவா
மாறுதோர்சுக மானது நீதா
பாரதில் வந்தவா நமோ நமோ. (பைரவ)

---

ராகம் - சாவேரி. தாளம் - ரூபகம்.

நாடிடு மோர்வீடமர் நட்பாம்ஜக ஜோதி
தானுயுல கானேய்விதை முதலே ஹெச்சரிகா.

தனிநாயுட னினிதாயுல குறுமோர்சுக புனிதா
முனிநாரதர் தினம்நாடிடு பாதா ஹெச்சரிகா.

கனிவாடிடு துணைநானென கமழாடிடு நடனு
கனலேபுவி யழலேகளை யழகா ஹெச்சரிகா.

கலைதேடிய கழலேயிது கலிகாணலு மெளிதே
மலையோயிது அடைவீரெனு மீசா ஹெச்சரிகா.

சிரமாலையொ டுறுசூலமு மணியுஞ்சிவத் துணையே
கிரியாங்கொடுங் கிரிவாயமர் நிலையே ஹெச்சரிகா.

சிரம்மேவிய சுடரேதென சிசுவே தழை யொளிகாண்
சரணுகெதி யடைவாயென மொழிவோய் ஹெச்சரிகா.

உயர் காசியி லுளபைரவ உறவேயுயிர் நிலையே
வயிறுறிடு முபதேசஸத் குருவே ஹெச்சரிகா.

உலைவாய்மெழு கதுபோலிள கிடுமோர்சிவ வேஷா
அலையாதுயர் பதமேயருள் ப்ரபுவே ஹெச்சரிகா.

---

குறிப்பு:—இவ்வடிகளின் முடிவில் திருப்பிப் பாடுங்கால் விதைமுதலே என்றும், உயர்பாதா என்றும், மாவழகா என்றும், ஜகதீசா என்றும், உயிர் நிலையே யென்றும், ப்ரதிமொழிவோ யென்றும், ஸத்குருவே என்றும், தனி ப்ரபுவே யென்றும் முறையே ஹெச்சரிகா சேர்த்துச்சொல்லவும்.

மங்களம்.

பைரவ பரஞ் ஜோதிக்கு மங்களம்.

ஸ்ரீ பைரவ வரதனுக்கு மங்களம்.

முத்தலைச் சூலனுக்கு முடிவில்லா நாதனுக்கு
சுத்தமாஞ் சைவனுக்கு சுந்தர வதனனுக்கு. (பைரவ)

காசியில் வாசனுக்கு காலபைர வாங்கனுக்கு
மாசிலா தீசனுக்கு மாவகில நேசனுக்கு. (பைரவ)

ஞமலியினுல் லாசனுக்கு நவிலும் சுப்ரகாசனுக்கு
நமதுள்ளம ரீசனுக்கு நன்றிவிஸ் வாசனுக்கு. (பைரவ)

பிரான்மலையில் வாசனுக்கு பக்தரிட நேசனுக்கு
நித்தியா னந்தனுக்கு நின்மலஸ்வ ரூபனுக்கு. (பைரவ)

நன்னீறபி ஷேகனுக்கு நடனவி நோதனுக்கு
தென்கைலை யோகனுக்கு தெளிமுத்து வடுகனுக்கு. (பைரவ)

ஆபதுத்தா ரணனுள் ஆடுமா வடுகனுக்கு
ஆனந்தக் கோலனுக்கு ஆதிஜோதி வீரனுக்கு. (பைரவ)

---

## நாமாவளிகள்.

(1) பைரவ சிவா பைரவ சிவா
பைரவ சிவவடுக பைரவ சிவா.

(2) வடுகேசா வடுகேசா
பைரவ சுந்தரா வடுகேசா.

(3) செஞ்சடைவேஷா நஞ்சணிஈசா
நம்சிவ ரஞ்சித வடுகேசா.

(4) சிவமய மங்கள சின்மயநாதா
சிவசிவ வடுக பைரவநாதா.

(5) சதுர்புஜ வீரா ஸாது மனோஹரா
சாதுர்ய நேயா வடுகையா.

(6) பைரவ நாமமே கற்கண்டு
கைதவ மெய்திடுஞ் சொற்கண்டு.

## குருத்தியானம்.

ராகம் - கரஹரப்ரியா. தாளம் - ஆதி.

சக்கனீ ராஜ மார்க்கமு லுண்டக என்ற மெட்டு.

பல்லவி.

சத்குரு நாத பைரவ டுண்டக
சஞ்சலம் யால ஓ மனஸா. (சத்குரு)

அநுபல்லவி.

சத்குரு தோடு சாஸ்வத முண்டக
சாஸ்த்ராலு சங்க்ய சாதகம் யால. (சத்குரு)

சரணம்.

சச்சிதா னந்த சதுர்புஜ வீருடு
நிச்சல தத்வ ஹ்ருதய வாசுடு ஜூசுகோ
நிச்சய போத நிரந்த ராத்ம பிர்மமே
சக்திசிவதோ சாயுஜ்ய மண்டுகோ மா. (சத்குரு)

---

ராகம் - விவர்த்தனி. தாளம் - ஆதி.

அபிமான மேன்னடு கல்குரா என்ற மெட்டு.

பல்லவி.

உளமாடு மென்குரு என்பிதா
உனுதாவிலா தோருல கேதா. (உளமா)

அனுபல்லவி.

உலைவாய் மெழுகென பக்திக்கு நையா
உளமேது இஜ்ஜால மேது ஏ வடுகா. (உளமா)

சரணம்.

அன்னை யெத்தனை அன்னை யென்றனன்
நினைவறி வேநீ நித்யனுமே
உனைவிடே னெனக் காருரை யுறவாட
முன்னைத் தோழனுமே தேவாா ஜினனும். (உளமா)

---

## கணபதி த்யானம்.

ராகம் - சங்கராபரணம். தாளம் - ஆதி.

எந்நாகு நிர்தய இனகுல திலக என்றமெட்டு.

பல்லவி.

கந்தனின் முதல்வா கரிமா முகனே
கற்பனைக் கெட்டா கண்ணி யனேவா. (கந்தனின்)

அநுபல்லவி.

சந்ததம் பணிந்தேன் சாக்ஷியா முந்தனை
சாதகப் பொருளோம் கார வடிவனே. (கந்தனின்)

சரணம்.

அந்தமாம் வள்ளியை அழகிய முருகன்
சொந்தமாய் மணக்கவுந் தந்திரஞ் செய்தவா
தந்தையைச் சுற்றியே தாணிக் தென்றவா
வந்துடன் றங்கியும் விக்கினங் கொய்யவா. (கந்தனின்)

மங்கை சரஸ்வதி மங்கள பூஜையில்
அங்கவ ளவசாம் அன்புடன் காக்க
பங்கமில் துதிக்கை பண்பொடு சுற்றி
பெண்மதி தேற்றி விண்ணுல கிட்டவா. (கந்தனின்)

---

## சரஸ்வதி த்யானம்.

ராகம் - ஆனந்த பைரவி தாளம் - ஆதி.

பல்லவி.

வாணி சரஸ்வதி வேதபுத்தக பாணி சரஸ்வதி கலை (வாணி)

அநுபல்லவி.

வேணியின் லக்ஷணம் வேதத்தின் விரிவாம்
வீணையில் நாதமும் மீட்டுங்க ரங்கொள் (வாணி)

சரணம்.

காணியும் பூமியும் தானமும் பெற்றவர்
நாணவும் புலவர் நாவிலும் நின்றவள்
பேணுமோர் வித்தையில் பேரின்ப மளிக்க
எணியென் றற்றனள் ஏகமாய் நின்றனள். (வாணி)

மாதுவெண் ணுடையில் மாமறை வீற்றனள்
சாதகஞ் செய்யவும் சேயுளந் தங்கினள்
சாலோக்கிய சாமீப்ய சாரூப்ய சாயுஜ்யம்
சாதுச கஜமாய்ச் சார்ந்திடத் தந்தனள். (வாணி)

---

## சுப்ரமணிய த்யானம்.

ராகம்-சாவேரி தாளம்-ஆதி.

பல்லவி.

திருப்பாங் கிரிவளர் மணியே உந்த
னிருப்பிட மெனதுள்ளம் நினையே. (திருப்ப)

அனுபல்லவி.

குமரகளின் மணாளா ஆளாய் சேய்நான்
பரதவித்து வந்தேன் வேளாய் வேலா. (திருப்ப)

சரணம்.

தெள்ளு தமிழ்க்குதவு வீரா சூரா
தென்மதுரைகொள் ளாதாரா
தெய்வயானைநாதா பாரா தாரா
தென்புடன் வந்தெனைக் காராய் நேராய் (திருப்ப)

---

## பரமசிவ த்யானம்.

ராகம்-கானடா தாளம்-ஆதி.

பல்லவி.

பக்திப்ரியாஸ்ரீ பார்வதிலோலா
பண்டுறவாடியே பாலன்முன் வா வா. (பக்தி)

அநுபல்லவி.

பக்தி முதிர்ந்திட சக்தி யளித்துடன்
முக்தி யளித்திட முத்தொழில் கொண்டவா. (பக்தி)

சரணம்.

அத்தி முகத்தனை யன்புட னளித்து
அறுமா முகனின் அன்பதாய் நின்று
ஆடிய பாதனுய் ஆபதுத்தாரணன்
நாடிய பைரவன் நானென நின்றிடு. (பக்தி)

---

## அம்பாள் த்யானம்.

இராகம்-பிலஹரி தாளம்-மிஸ்ர சாப்பு

பல்லவி.

சகல புவன ரக்ஷகி சாக்ஷிமீ ஞக்ஷியே
சஞ்சலந் தீர்த்திட சந்ததம் பணிந்தேன் ஓ. (சகல)

அநுபல்லவி.

அகமுள் ளுணா நின்றனை அடிகள் மகிழு முக்கமி
அந்தமுள் செந்தமிழ் தழைத்திட பந்தமில் முக்தியில் ரகித்திட (சகல)

சரணம்.

அகண்டபரிபூரணி ஆத்ம லிங்க வாஸினி
ஆனின்ரக பூஷணி அர்த்த சடல வாஸினி
அன்புள் ளுருகு மன்புநீ ஆநந்தக் கூத்த னன்புநீ

அன்னையும் பின்னையும் முன்னையு முன்னிய—
எண்ணமும் வண்ணமுந் திண்ணமாய்த் தந்திடு. (சகல)

மதுராபுரி வாஸினி மங்கை சுகுண பூஷணி
மதிவதன ஹாஸினி மன்மத தகனன் நேசிநீ
மகிழுங்கைலை வாஸினி மஹிஷா சுரமர்த்தனி
மத்தடி பட்டவன் மந்தையை மேய்த்தவன்—
அக்கண்ணன் சோதரி முக்கண்ண னுதாரி. (சகல)

---

## உக்ரகிரீஸ்வர த்யானம்.

ராகம் - சக்ரவாகம் தாளம் - சாப்பு.

பல்லவி.

உக்ரகிரீசா உண்மை ப்ரகாசா
உத்தம குணதாச ருய்விஸ் வாசா. (உக்ர)

அனுபல்லவி.

ஊர்த்துவ தாண்டவ மாடிய ஈசா
உய்வழியருள வுன்பாதம் பணிந்தேன். (உக்ர)

சரணம்.

உற்றது மொழிந்தேன் சொற்றுணை யமுதூட்டு
ஒப்புற வொழுகுயர் உத்தம வழிகாட்டு
தப்பிதச் சாக்கதை யப்புற மொழித்தோட்டு
பெற்றவ னுற்றவன் மற்றவ னென்றுனைப்—
பற்றிட நற்றுணை பெற்றவ னெனைக்கூட்டு. (உக்ர)

தேனுடியில் மூழ்கினா னுடிடஞ்சேர
வாழ்நாளும் வீண்நாள் ஆகாதெனக்கூறி
மானுடு பிதாவுனை நான்நாடி யின்புற
தானே தானு யானுனைய் காண—
நானே நீயாய்ப் பூணுய் பாரில். (உக்ர)

என்னை வணங்கிசுக அன்னையமிர் தேஸ்வரி
தன்னை வணங்கிஜெய முன்னிமும் மூவிரண்
டுண்டு படிதாண்டி யண்டு பைரவனடி
பண்டுற வுண்டிவன் கண்டகங் கொண்டிடு—
தொண்டுசெய் யுண்டில முண்டித முண்டெனும். (உக்ர)

சக்தியும் சிவமும் பக்தியாற் கலந்திட
சுத்தமாய் வெளியாய் சச்சிதா னந்தமாய்
முத்திய வெளியிலிது மங்கை பாகருமாய்
மத்தியில் நத்திய நித்திய வஸ்துநல்—
முக்திய ளிக்கும்நம் பைரவ னென்றிடு. (உக்ர)

---

## அமிர்தேஸ்வரி த்யானம்.

ராகம் - பியாகடை தாளம் - ஆதி.

பல்லவி.

அன்னையமிர்தேஸ்வரி சொர்ணவல்லித்தாயே
முன்னைத் தவப்பயனால் உன்னைக் கோறிப்பணிந்தேன். (அன்னை)

அனுபல்லவி.

தன்னை யறிந்துசுகம் நண்ண மதியளித்த
கண்ணிற் கலந்தவொளி தன்னிற் கலந்தமரும். (அன்னை)

சரணம்.

ஐந்திற் கலந்தவுடல் நைந்திப் புவிக்குவா
நிந்தித் தவர்முறனைச் சிந்திக் களவதுமுன்
சொந்தத் தடுத்ததொழில் தொந்தப் பிறப்பகல
வந்துற் றுனையறிய பந்தத் துழல் சுகிர்த (அன்னை)

---

பிரான்மலையில் பைரவரை ஓம்கார மத்தியிற் கண்டது.

ராகம் - சகாணா தாளம் - சாப்பு.

பல்லவி.

பாங்காய் பைரவா ஆங்காலங் கண்டேன்
ஓம்கார மத்தியில் ஓங்கா தோங்கினாய். (பாங்காய்)

அநுபல்லவி.

பண்பாடுன்னாலயம் அன்பொடுசுற்றி
திண்ணமாய் கிரிவலம் நண்ணிடக் கண்டேன். (பாங்)

சரணம்.

சாங்கோ பாங்கமாய் சாக்ஷியாய்ச் சொன்னேன்
சார்ந்த கிரிசுற்றி சார்ந்து மங்கைபாகர்
ஓங்கிய விடஞ்சென்று ஓர்நினை வதுகொண்டு
ஒய்ந்தம ருந்தனின் ஓங்கார மூள்நிலை. (பாங்காய்)

---

## கிருஷ்ண த்யானம்.

ராகம் - பைரவி தாளம் - ஆதி.

பல்லவி.

கோவே துவாரகை கோல்புரி மன்னா
ஓய்வாய் பக்தருள் வாழ்வே வாழ்வாய். (கோவே)

அநுபல்லவி.

கோதிலா யசோதை கோதை மகிழ்பாலா
கோறும் பதமேதா கோகுல பரிபால. (கோவே)

சரணம்.

கோதை ருக்மணியொ டோது சத்யபாமா
மாதரு மருகாடு சாதக சகிகாண

நீதியெ னமொழிந்து போது விளையாடு
கோபிகா ரமண கோபால கிருஷ்ண. (கோவே)

---

## நாராயண த்யானம்.

ராகம்-மோகனம் தாளம்-ஆதி.

பல்லவி.

நாராயணனே கெதி ஸ்ரீமன்
நாராயணனே துதி மனமே. (நாரா)

அநுபல்லவி.

நாராயண னேகெதி நம்பினோர் கட்கெல்லாம்
நாயகனாய் விளங்கி நான்முகன் படைப்போங்க. (நாரா)

சரணம்.

நாத மோகனமும் நாடிப் பாடித்துதி
ஆமைச் சகூர்ம் வராக நரசிம்ம
வாமன பரசுராம ராமகி ருஷ்ணபல
ராமகல்கி யவ தாரமெடுத்த ஜெய (நாரா)

ஆர்கலியுலகு ஆனந்தந் தழைத்தெழ
ஆருயிர்த் தோழனு யாதார சூரிய
நாரா யணனைக் காலங் கழிக்கவிருள்
நாளும் விலக்குசுய நேமங் கொள்ளுமாதி (நாரா)

---

## பக்தியை விசேஷமாகக் கூறல்.

இராகம்-தோடி தாளம்-ரூபகம்.

பல்லவி.

பக்தி மார்க்கமும் அதிசுலப முக்தி மார்க்கமாம் தீவிர (பக்தி)

அநுபல்லவி.

முக்திக்கு இச்சிக்குந் திக்திக்கும் பக்திக்கு
யுக்திக்கும் புக்திக்கும் வித்தைக்குஞ் சக்தியோ. (பக்தி)

சரணம்.

யுக்தியும் புத்தியும் வித்தையும் பெற்றவர்
நித்தியங் கொள்ள நினைப்பது முண்டோ
சத்தியந் தவறி சாஸ்திரம் வழுவித்
தித்திக்கும் கரும்பைத் தெருவி லெறிந்து
சத்திக்குந் துரும்பாங் கற்பம் முடித்து
சித்திக்கு மென்றுண்டு கக்கியே மாந்தார்
எத்தகை பக்தியும் முக்திய ளிக்குமாம்
சக்தியும் சிவமும் சலியா துரைத்தார். (பக்தி)

---

இராகம்-நாதநாமக்ரியை தாளம்-ரூபகம்.
சிவலோக நாதனைக் கண்டு—என்ற மெட்டு.

பல்லவி.

குணசீல வடுகனை யண்டிக் கூவித் தொழுவோம் பாரில் (குண)

அநுபல்லவி.

மனமு றண்களை நீக்கித் தொழ
ஜனன மரணந் தடுப்பா ரென்றும். (குண)

சரணம்.

வந்தவினைப்பை விடுத்தோம் புவி
வருமுதலையுங் கெடுத்தோம்
கந்தமூலம ருந்தினமேது
காமந் தினஞ் சீராய்த் தள்ளி. (குண)

மாயை ப்ரபஞ்ச மடுத்தே சுகம்
மறுவி வழியை விடுத்தே

சாயை சதமென நின்றுடாமல்
சௌமியம் மிக்க சாக்ஷியாமோர் (சுண)

பாரினில் பந்தம் விடுத்தா ரவர்
பந்துவென் றணைவதுங் கொடுத்தார்

தேடும் பாதங் காண்பா யென்று
தேடி யரு ளன்ப னென்று (சுண)

---

இராகம்-ஹம்ஸத்வனி தாளம்-ஆதி.

வாதாபி கணபதிம் பஜேஹம் என்ற மெட்டு.

தேவாதி குலபதிம் பணிவம்
தேஹஹாஸ்யம் திகம் பரந்தோய் (தேவாதி)

வேதாகமம் மேவிய வதனம்
வேத வைபவ மிலங்கு நயனம்
தீரபூஷணம் திகழும் சாதனம்
திண்ண நாயினம் திவ்விய வாகனம். (தேவாதி)

சிதானந்த மந்த சிவமுசித ப்ரகாசனும்
த்ருசூலமுள் கானும்

தபோதனருட்சு காத்ம வாசனும்
தாசாசேவ சூக்ஷ்மஞ்ஞனும்

சுபோதனத்தாடு சாமான்யனும்
சொர்ண ஸ்வரூபம் சுயம்ப்ர காசம்

சுதந்தரம் சுபகரம் சுதண்டம்
சிரமாலை பெற்ற சாக்ஷி கண்டம்

மஹோன்னத தேவ சேனு பாரம்
மறுவிய வீரம் மாறு சூரம்

ஆபதுத்தாரணன் நாடிய நண்பன்
சத்ருஜ்ஜய சாதன னுமின்பன். (தேவாதி)

---

இராகம்-சாமா தாளம்-ஆதி.

சாந்தமு லேகா என்ற மெட்டு.

பல்லவி.

நீயுற வாடா நீள்சுகமேதா
நீயுறை சிவ வடுகா. (நீயுற)

அநுபல்லவி.

நீள்புவி தந்தையே நீயுள மாடாய். (நீயுற)

சரணம்.

தாயமு துண்டுமே தான்வளர் சிசுவின்
வாயமு துண்டுநீ வாழ்த்தியும் வந்திடு
தாமத மேனோசொல் தாவியும் வந்திடு
தாரகவிதய வாதார தந்தையே. (நீயுற)

நீர்பிரி கோலாய் நீள்புவி கண்டுமே
நீயுற வென்றுநான் நீள்புவி விண்டனே
நீரெனு முவமையே நீயென தகமுளாம்
நீறணி நிறைவே நீங்குமோ நன்னீர். (நீயுற)

தேன்நிறை ராட்டெனும் தேர்ந்த விதயமுள்
தேவர்க ளகமலர் தேவநின் னருளைத்
தேன்நுகர் வண்டெனத் தேடியுட் கொண்டனன்
தேன்நிறை மலரே வேள்மலர் கண்முனும். (நீயுற)

பாதக மகற்றிடு பார்புகழ் காசியில்
பாவனை கொள்கால பைரவ நாதா
ஆதிரை தினமதி லாடிய சுரபதி
ஆபதுத் தாரண னண்டிய சத்குரு. (நீயுற)

---

இராகம்-மயூரத்வனி தாளம்-ஆதி.

ராகசுதாரச என்ற மெட்டு.

பல்லவி.

தாமஸ ராஜஸம் தான்தவிர் தஞ்சமே
தாமதமேன் வடுகா. (தாம)

அனுபல்லவி.

ராக த்வேஷசோக மோகம தகல் கண்யா. (தாம)

சரணம்.

ப்ரான்மலே யன்புடன் மேவிச் சார்ந்தோ ராள்பவா
சுதன்னின்னு பதத்தா ரணன்தினம் நாடு மமுதே. (தாம)

---

இராகம்-தோடி தாளம்-ரூபகம்.

விடலனுகோ தண்ட பாணி என்ற மெட்டு.

பல்லவி.

கலிவரதா கட்கசூலம்
அணியுமென் மித்ரா பைரவா. (கலி)

அனுபல்லவி

சிரமா மாலையே கொண்டு திகழும்
ஜோதிக் கொடுங் குன்றே யுறை ஜோதியே. (கலி)

சரணம்.

பிரமன்சிரம் கொய்த தேவர
ஹராஹரசிவ சிவநாதா
காந்தருவாய் சிசுநானுனைக்
கைவிடேனில் துண்மையே

வருவீரோடி வழுவிடாது
குருவாயும்மை தினம்மேவும்
இன்ப வாபதுத் தாரணன்
சோர்விலாது துதித்து மகிழும் (கலி).

---

இராகம்-ஸ்ரீரஞ்சனி தாளம்-ஆதி.

புவனிதா சுடைநீ என்ற மெட்டு.

பல்லவி.

சிவசிவா சங்கரா ஸ்ரீபைரவா
சிந்தையாடு தேவா சிவசுப்ர காசா. (சிவ)

அநுபல்லவி.

ஜயவீரனே சகஜ நேம நேயா
சத்ரு நாசனே ஜன்மமுத் தாரண. (சிவ)

சரணம்,

பாசதண் டமொடு கட்கம தண்டி
பாலன்முன் னினிதாய் வடுகா வருவாய்
பாரினிற் கெஞ்சியே பாதமண்டி னேனே
பக்தனுபதுத் தாரணன் கொண்டாடும் (சிவ)

---

இராகம்-ஜயமனோகரி தாளம்-ரூபகம்.

நீபக்தி பாக்ய சுதா என்ற மெட்டு.

பல்லவி.

தாமுக்தி மார்க்க மதே வடுகா நீயே சந்ததம் (தாமுக்தி)

அநுபல்லவி.

நாய் வாகனம் மீதேயமர்
நாயகஜய பைரவா நீ (தாமுக்தி)

சரணம்.

வேதாகம மேதிகழும் வேதவை பவனே சிவனே
பக்தனுபதுத் தாரணன் பார்த்தகம் மகிழ்தேவா. (தாமுக்தி)

---

இராகம்-காபி நாராயணி தாளம்-ஆதி.

சரசஸா மதன என்ற மெட்டு.

பல்லவி.

சகல ஜீவ ராசி வாச சத்ருஜ்ஜய
சாக்ஷி பைரவா சூலாயுதா. (சகல)

அநுபல்லவி

பகரும் சாந்தனே பணிவே னுன்னையே
பருதிகா ணிமம்போல் பழவினைகள் கொய்யாய். (சகல)

சரணம்.

விடுவதேதுை சொன்னேன் ஆபதுத்தாரணன்
அடுசிநேக தோத்ர நித்ய மங்களா
நடுவ னேட்டும் சிம்ம நடராஜ வேஷா
மடுவதா மிப்பூமி மாயை நாளுஞ்சேதி. (சகல)

---

இராகம்-தோடி தாளம்-ஆதி.

சாதர முக குகா என்ற மெட்டு.

பல்லவி.

ஸ்ரீ வடுகபைரவா க்ஷேமமையா. (ஸ்ரீ)

அநுபல்லவி.

வாழிதய வெளியே அதிபதி நீ
வாழ்த்தி சந்ததம் வாக்களித்தெனை நோக்கிடுவாய் (ஸ்ரீ)

சரணம்.

மாவைவர் விலகிட மகிதலத்தில் நீ
மகிமை தந்தால் மிக மகிழ்ந்தான்
நாமம் சதாசொல்லியே மறவாபக்தன்
ஆபதுத்தார னன்மகிழ்ந் திங்கு வந்தேன். (ஸ்ரீ)

---

இராகம்-பந்துவராளி தாளம்-ரூபகம்.

சம்போ மகாதேவா என்ற மெட்டு.

வந்தே னுறவாடி பைரவசிவ
தாசன் மகிழுந்து (வந்தே)

அநுபல்லவி.

வந்தே னுறவாடி வரதசுக புவிரக்ஷக
பங்கேருக லோசன பாதாம்புஜ சேவைநீதா. (வந்தே)

சரணம்.

பரமசிவா ஹரசுரநர ருற வென்று ருறவுறநீ
வரமேதர ப்ரான்மலைவாழ் கலிவாத ப்ரகாசா

காந்தந்தெனை யாதரிநீ கனிவாய் நோக்கிய நாதா
கிரிவாசா மாமந்தஹாசா சகஜ பராக்ரம சரபதி. (வந்தே)

---

இராகம்-சங்கராபரணம் தாளம்-ஆதி.

பல்லவி.

வருவாய் வருவாய் வடுகையா
தருவே தருவா யிருகையால். (வருவாய்)

அநுபல்லவி.

பிறவா துயர்பதம் கரவா தளித்திட
திறமாய் ஞமலியில் குருவே வருவாய். (வருவாய்)

சரணம்.

சிறியே னெளியேன் பெறுவேன் விழியேன்
குறியேன் திரியேன் பிறியேன் முறியேன்
விரியேன் நெறியேன் வெறியேன் வெறியேன்
கிரியேன் கிரியேன் அறிவே னுரியேன். (வருவாய்)

மதியேன் விதியேன் நதியேன் நிதியேன்
ஸ்ருதியேன் ஸ்மிருதியேன் ஸ்துதியேன் க்ருதியேன்
குதியேன் முதியேன் துதியேன் திதியேன்
மதியேன் நதியேன் ஸ்திதியேன் ப்ரதியேன் (வருவாய்)

---

இராகம்-பூரிகல்யாணி தாளம்-ஆதி.

பல்லவி.

கிரிமே லுறவா யுறுவாய் வருவாய்
வருவாய் வருவாய் வரமே தருவாய். (கிரி)

அநுபல்லவி.

நாகாபரணு நாய்கொண்டதேவா
நான்கண்ட சுகுண நாட்டியப் பொருளே. (கிரி)

சரணம்.

ஊட்டியமுதளித்து பூட்டும் முறையளித்து
காட்டியள வெடுத்துப் பாட்டி லளவளித்து
தாட்டிகமுங் கொடுத்து நாட்டி லெனேவிளித்து
கூட்டியுரிமைநத்திக் காட்டி மதியளித்து. (கிரி)

---

இராகம்-பைரவி தாளம்-ஆதி.

உபசராமு சேஸே வாருன்னுருனி என்ற மெட்டு.

பல்லவி.

காசிவாசா வின்பநேசா காலபைரவா கார்சிவா (காசி)

அநுபல்லவி.

பாடின னுகந்து வா வா வா
பாடும் பாலன் பாவனன் வா வா. (காசி)

சரணம்.

ஜன்மமில் நேயர்க்கு ஜகத்துயர் போக்கவும்
ஜயமடைந்த தொண்டர் ஜடந்தனைக் காக்கவும்
அன்புகொண்டு வாடா அருப்பதஞ் சேர்க்கவும்
அண்டிய பக்தன்வியந்திட பண்டித பாமரர் பணிந்திடு. (காசி)

ஆன்ம வித்தைதந்து ஆதாவாய்த்தேர்ந்து
நாணு நினைவுகள் நாடாதொழித்து

நானுவொன் றுணா நான்றுனுய் நின்று
நான்முகன் படைப்புத் தழைத்திட நாடிடு சித்தம் செழித்திட.(காசி)

இன்பமும் துன்பமும் இயல்பென்றிருக்கவும்
நன்மதியளித்து நற்றுணை கொடுத்து
கன்மமும் விண்டு கற்பக மிணைத்து
இகபா மிரண்டிற் சுகித்திட மிருபத சாயுஜ்ய மளித்திட (காசி)

ஆரிய பூமியில் ஆபதுத் தாரணன்
பார்த்து மகிழ்ந் துந்தன் பாதத்தே யுழன்று
யாழிசை யமிர்தம் யாசியா துண்டு
சாயஜ்ய மடைந் துன்னுள்ளமர் காக்ஷியளித்திட்ட சாக்ஷியே. (காசி)

---

(பதம்) இராகம்-பரசு தாளம்-ஆதி.

இன்னும் வரக்காணமடி என்ற மெட்டு,

பல்லவி.

வடுகா நீதானிணங்கினுய் பக்தன்
வருத்தத்தை நீக்கித்தள்ள வழக்கென் சிரிப்பு. (வடுகா)

சரணம்.

வானுலகில் நரர் தான் றுகருந் தெய்வம்
நானென நின்றவா நர்த்தன புருஷா
வளரொளியே வாக்கருளே
வாழி வாழி யென்றுநீ வானுலகில் வாழ்த்தியே. (வடுகா)

வஞ்சனை யென்ன வீரா சிந்தனை யென்ன நேரா
தஞ்சமென் றுரைத்தேற்றித் தரணியில் நாளுங்காக்க
தலைமை கொண்டாய் அலையை விண்டாய்
கெஞ்சிக் கொஞ்சி மிஞ்சிப் பஞ்சை யுலகில் வந்து (வடுகா)

---

இராகம்-சாயாதரங்கணி தாளம்-ரூபகம்.

இதர தெய்வமுலவலெல்ல இலனுசௌக்கியமா என்ற மெட்டு.

பல்லவி.

சகஜ நடன வடுக சிம்ம சமய சஞ்சீவி வா வா. (சகஜ)

அனுபல்லவி.

ஜகஜோதியுமான சகா வாபதுத்தாரண னுய்ய வா வா. (சகஜ)

சரணம்.

ஜனனம் விலக்கிக் காருமென்னை
ஜனன பூமி மாயை வேண்டேன்
மனமே யிடந் தருவதில்லை
மாயை நாளும் விண்டிடவே. (சகஜ)

---

இராகம்-பூரிகல்யாணி தாளம்-ஆதி.
பரம பாவன ராமா என்ற மெட்டு.

பல்லவி.

ஞமலி வாகன காண ஞெகிழிதா குண குண
ஞாலம் புகழ்ந்திட நயந்து பயந்தே வந்தேன். (ஞமலி)

அனுபல்லவி.

ஞாயமா யுனையுற்றால் ஞானமும் வேகமுண்டாம்
நயன சிங்காரனே நீயெனக் காதரவாம். (ஞமலி)

சரணம்.

கருணை புரிவாயிப்போ காருண்யனே யென்றன்
கருவள ரன்னையே கலப்பில்லாப் பாத்திரன்

ஆபத்துத்தாரணன் பாடித்துதித்திட
அபயமீந்து தாக அன்பன் கண்டு மின்பந்தா. (ஞாமலி)

---

இராகம்-லதாங்கி தாளம்-ஆதி.

அபராதமுலு நீவுமன்னிஞ்சி என்ற மெட்டு.

பல்லவி.

வடுகாவுனைப் பணிவேன் சதா என்
துணையென்று கொண்டு
வாழ்வேன் வாளண்டு. (வடுகா)

அனுபல்லவி.

புவிமீதினில் பூர்ண சம்பூர்ண
புகழ்பைரவா யெனையாள் கௌரவா (வடுகா)

சரணம்.

தேன்கலந்த நோக்கு தென்பாய் வினைபோக்கு
மூன் நிறைந்த சாக்கு உய்வது முண்டக்கு
நாத நின்குலம் நாள் தழையவேண்டும்
நலங்கொள் பந்துநின் கரங்கள் நிதங்கொடு. (வடுகா)

---

இராகம்-காம்போதி தாளம்-ரூபகம்.

ராமநாமமே தெய்வீக ஞானமந்திரம் என்ற மெட்டு.

பல்லவி.

கீத கோஷமே ஜன்மாந்த்ர பாக்ய வாசனை (கீத)

அநுபல்லவி.

பேரில் சுகம் தான் வளர்க்கும்
சங்கரன் மங்கையில் ஜகபதி யருள்புரி. (கீத)

சரணம்.

கட்கமது கொண்ட கண்ணிய னளித்த
களிபெருதமின்ப வுருசியதுமிகுத்த
கரும்புதேன்சுவை காதலதாகும்
கண்டவன் விண்டிடக் கனிவுரு வதுமில்லை. (கீத)

சஞ்சல மதெல்லாம் சந்ததம் விலக்கும்
சதுர்புஜ முஞ்செஞ் சடைகொள் மினுக்கும்
சுயம்பிர காசமும் சார்ந்திடுந் தேவன்
சுதனுப துத்தாரணன் படிபத மேற்பவன் (கீத)

---

இராகம்-கதன குதூகலம் தாளம்-ஆதி.

ரேகுவம்ச சுதா என்ற மெட்டு.

பல்லவி.

சரணகெதி ஜகம்மீதில் நீயே
சந்ததியே தாக்ஷி சாபல்யங் கடாக்ஷி (சரண)

அநுபல்லவி.

வடுகா புரி முடிவேஷதாரி
வநதுளம மகிழ்ந்தும் வம்ச விர்த்திதா. (சரண)

சரணம்.

தந்தை தாயும் நீயே பந்துமித்ரர் நீயே
சிந்தை யுள்ளும் நீயே சொந்த முன்றன் சேயே

வந்தருள் கொடாய்
திரு நீறபி
ஷேக சுகானந்தன் ஆபத்துத்தாரணன்

(சிட்டாசுர சாகித்யம்.)

நாதனுமாகிவி நோதனு மானப
ராபரனே இகபர சமரச சுகமது பெறவண்டங்
தொழும் மதுதனி லுருசியெ னுமுனது
பதமலரடி தருணமிதளி. (சாண)

---

இராகம்-ஜங்காரத்வனி தாளம்-ஆதி.

பண்ப்தி சாயே என்ற மெட்டு.

பல்லவி.

அடியிணே காண நான் சாது ஆடித்தாள் பணிந்தேன் (அடி)

அனுபல்லவி

சிவமய மங்களச் சிசுவெனைக் காராய்
சின்மய சொரூபா சொரூபசேவை நீதா (அடி)

சரணம்.

தனிகுண வடுகா தஞ்சனேயேலையா
தவமுனி தேவரும் வந்தித சுகுண
தகிகிட தோமெனத் திகையா நடன
தனியாபதுத்தாரணன் புகழ்ந்திடும் (அடி)

---

இராகம்-களாநிதி தாளம்-ஆதி.

சின்ன நாடேனு என்ற மெட்டு.

பல்லவி.

பைரவாசிவா பார்க்கவேணுமென்னை. (பைரவா)

அனுபல்லவி.

ஜன்மந்தீரையா ஜகமது மெய்யா
சாக்ஷி நீயென்பார் சலியாது காண்பார் (பைரவா)

சரணம்.

வந்தனன் பண் பாடி
வானவர் கோவே
விண்ணுளார்க்கொப் பாக்கும்
விரும்பிச் செய் தேவா
பக்தர் விஸ்வாசா பதிக்குளுல்லாசா
பரம சாந்தந்தருவாய் பணியுஞ் செய்முன் வருவாய். (பைரவா)

---

இராகம்-கமாஸ் தாளம்-ரூபகம்.

சுஜன ஜீவனு என்ற மெட்டு.

பல்லவி.

பங்கஜ லோசனு வடுகா
பந்தவி மோசனு வடுகா. (பங்கஜ)

அனுபல்லவி.

ஞமலி வாகனுர்ப்புக ஞெகிழிதாகுணு வடுகா
நமனெந்தனைத் தொடச்சிந்தனை செய்வதேதுகாண் வடுகா (பங்கஜ)

சரணம்.

காவற்சூல காதல்லோல காருண்ய சீலா
பாவன சூர பழுதில்லா பதமளி தூலா
காவலானவா சகஜன்ய லாவண்யா வடுகா
ஆவலுடனு மாபதுத்தாரணன் பணிரஞ்சிதா வடுகா (பங்கஜ)

---

இராகம்-விஜயஸ்ரீ தாளம்-ஆதி.

வரநாரத நாராயண என்ற மெட்டு.

பல்லவி.

வடுகா சிவ வடுகா சிசு
வடுகா ரிதமிதுதா னறிவதே. (வடுகா)

அநுபல்லவி.

வருவாய் தனிநாயுட னுதரவாய் உன
தணைவினிற் கெதி பெற (வடுகா)

சரணம்.

அமராரும் புவனரும்
அணுகுவார் பார்
அணுவினு ளசையும்
அழகனே கார்
துணையார் புவி மீதினிலே யெனையாள்
ஆபதுத் தாரணன் பணி (வடுகா)

---

இராகம்-நாத நாமகிரியை தாளம்-ஆதி.

பல்லவி.

பைரவனே துணை மனமே

பைரவனே துணை வையகம் மீதினில்
பரம்பரை நேசித்த பாதையிற் சேர (பைர)

நாரத சேவிதரான சிங்கார
விசேஷ விநோத சிநேகனைச் சேர (பைர)

மார்க்கண்ட ரக்ஷக ரான மனோஹர
மன்மத தஹன மாண்பனைச் சேர (பைர)

அக்காளை யேறி யறுமுக னளித்த
அரும் பெரும் பித்த னடியிணைச் சேர (பைர)

துஷ்ட நிக்ரக சிஷ்ட பரிபால
கஷ்ட நிவாரண இஷ்டனைச் சேர (பைர)

மான்மழு கங்கை மதியொ டரவு
தான்கொளு சங்கரத் தருவிணைச் சேர (பைர)

களியுறு முருகனைக் கரிமுக னிருவரை
கலியுகத்தளித்த கண்ணனைச் சேர (பைர)

ஐம்புல வேட ரலைந்திடு கானக
கைமுதல் ஜோதியிற் களித்துடன் சேர (பைர)

ஒன்பது வாயிலா மோர்புலால் கோட்டை
அன்புள சிம்மா சனபதி சேர (பைர)

சஞ்சலம் மிஞ்சிய வைஞ்சுக பாசம்
எஞ்சிய திரைகடல் விளைபொருள் சேர (பைர)

மண் பெண் பொன் மாயை யுறை கடல்
கண்ணிய வினைபொருள் காண்சிவம் சேர (பைர)

பைரவனே சிவம் பரப்பிர்மமே சிவம்
பரஞ்ஜோதியே யிவன் பாதத்திற் சேர (பைர)

ஆர்கலி யுலகில் ஆபதுத்தாரணன்
பார்த்தகம் மகிழும் பாதனைச் சேர (பைர)

---

பஜகோவிந்தம் பஜகோவிந்தம் பஜகோவிந்தம்

மூடமதே என்ற மெட்டு.

துதிநீமனமே துதிநீமனமே துதிநீமனமே பைரவனை
கொண்டேற்பான் கொஞ்சியுமே மேலாய்
அதிபதி ரக்ஷித் திடுக்கன் களைவான் (துதிநீ)

ஈசனு மேயவ னிருல கிஷ்டனும்
அசுரப் புற்றை அழித்தொழி துஷ்டனும்
வல்லவனுமவன் வந்தே காக்க
கிட்டாய் நாளும் கிலேசமும் தீர்க்க (துதிநீ)

வீணாய் நாவது வீருய்ப் பேசும்
வித்வான் ருனுய்த் தாளா மாசும்
வேண்டி யுரைக்கும் வேதமும் வீசும்
விட்டகல் மறுமையில் வாடிக் கூசும் (துதிநீ)

சஞ்சலந் தீர்த்திடு சங்கர னேயவன்
பஞ்சை யகற்றிடும் பரமனு மாமவன்
எஞ்சிய வடுக பைரவ னுமவன்
செஞ்சுடர் ஜோதி செழித்தவ னுமவன் (துதிநீ)

எங்கும் நிறைந்த எஞ்சிய தேவன்
பொங்கிடு வினையகல் போற்றிடுந் தேவன்

கெங்கையி லாடுவன் கேட்பது மீவன்
தெங்கதிவன் குணம் தெவிட்டா தேவன் (துதிநீ)

ஐஞ்சுக பாசம் அறவே தீர்ப்பான்
வஞ்சியர் தம்மை வாழ்த்தியே காப்பான்
அஞ்சிய வடியை யமர்ந்தே காப்பான்
தஞ்சமென்றோரின் தவிப்பது தீர்ப்பான் (துதிநீ)

அலையும் மனதை அடக்கியு மாள்வான்
சிலையி லிருந்தும் சிநேகமா யாள்வான்
வலையிவன் கருணையால் வளைத்துமே யாள்வான்
விலையிலா யிவன்பெயர் விளம்பிட வாள்வான் (துதிநீ)

ஸ்ருதியும் ஸ்மிருதியும் சுருக்கமா யூட்டுவான்
சுழிமுனை யிருகலை சுலபமாய்க் கூட்டுவான்
சுகங்கொள யிருவினை சுழலென வோட்டுவான்
சுருக்கமாய் மாயைச் சிறையிலே மாட்டுவான் (துதிநீ)

அன்புட னுள்ளிடம் அனந்தமாய் நிற்பான்
ஒன்பது வாயிலை ஒடுக்கியே காப்பான்
இன்பமாந் துன்பம் இணக்கமாய்த் தீர்ப்பான்
கன்ம வினைகளைக் கழற்றியே யேற்பான். (துதிநீ)

பொன்மலை பெற்றுப் பொங்கமு தள்ளலாம்
முன்வினை யகற்றி மூன்றையுந் தள்ளலாம்
தன்னையறிந்து தனி ஜோதியைக் கொள்ளலாம்
ஜன்ம ரஹிதந்தனை சகஜமாய்க் கொள்ளலாம். (துதிநீ)

ஆபதுத் தாரணன் ஆனபா யேற்பான்
ஆனந்தங் கொண் டாடியே நிற்பான்
ஆவியுள் ஞானம் ஆற்றியே சேர்ப்பான்
ஆழிசூழ வனியில் ஆதா வளிப்பான். (துதிநீ)

---

சிவசங்கர சிவசங்கர ஹரமேஹர துரிதம் என்ற மெட்டு.

வடுகா சிவ வடுகா சிவ சிவமே சிவ வபயம்

சிரமாலையொ டுறுசூலமு மணியுஞ்சிவத் துணையே
கிரிமேலம ருறவேநம னணுகாதெனை யணையே
பரியேமன மறியாதுனைக் குறியாதிரு வினைகார். (வடுகா)

தனிநாயுட னனிதாயுல குறுமோர்சுக புனிதா
இனிமேலுனைக் கணமேவிட மனமேயிடந் தருமோ
கனிபோலுனைக் களியோடுறுங் கணமேயிதன் குணமே (வடுகா)

உயர்காசியி லுளபைரவ வுறமேபதம் பெறவே
வயிரூரிட வமுதாமெனு முணவேயுன துறவே
மயலேதென மனமேபுத முனதோர்பணி விடையே. (வடுகா)

மதனேயெறி நுதலேயடை முதலேகுணக் கடலே
மதிதா னுறை நதிதானடை சிரமேசடை முடியே
ததியேதரு விடமேபுசி பதியேசிவ வடுகா (வடுகா)

சிசுமார்க்கண்ட னிசைபூசையி லசையாகண்ட மதையே
பசிமேற்கொண்ட வுணவாமெனக் கணமேவிண்ட வனையே
சிசுமேவிய நமனாரென க்ஷமியாதுதை ரக்ஷகா. (வடுகா)

கனயோகனும் மனவேகனும் பணிவேதனும் மெனுமோர்
மனமேநினை வினையேயகல் மணியேசிவ மணியே
கனலேறிய சினமேகொளு முளமேவிடு தணிவாய் (வடுகா)

விடம்மேவிய விருடபாவன திடபாலொரு கன்னியே
திடமாயர வுடையோய்சிர மிடையேயிரு கன்னியார்
விடனேயுன துடனேயமர் விடமாதுவம் புஜமார். (வடுகா)

உலைவாய்மெழு கதுபோலிள கிடுமேசுகு ணபிரான்
மலைவாயமர் நிலையேயுன தலையேகரு ணையிரான்
இலையேயிஃ துலகோரறி விலரேபுகல் கெதியார் (வடுகா)

வருவாயென துறவேபதந் தருவாயிது முறையே
குருவாயுனைப் பெறுவோரிடம் வருமோவினை யுரையே
அருகாமையிற் தருவாமெனு மறிவேவிதி மறையாய் (வடுகா).

மதித்தோர்க்கித மதுவேதா கதித்தேயெழு சுகுண
விதித்தாடிடு விதிதானகல் பதத்தாடிட சுதந
பதுத்தாரண னதிதீவிர மனத்தோடமர் வடுகா (வடுகா)

---

கல்லார்க்கும் கற்றவர்க்கும் என்ற மெட்டு,

விரியனென்ற அரவுமாயை விடமருந்தும் மனமே
வீடுவாசல் வீண்சுகத்தில் வீசியாடும் மனமே
அறியசுற்றம் அறுசுவையி லறிவிழிக்கும் மனமே
ஆலமுண்டா னடிநின்று னம்வடுகன் பணியே
மறிக்குமுடல் மறைந்துநிற்து மதிசயமு மவனே
மாதொடைக பாலமுடன் மாறவேடச் சிவனே
கரிமுகனை யறுமுகனைக் கனிந்தளித்த களிறே
காசிநகர் வாசியவன் காப்பனுன்னைத் தினமே,

வறுமை தள்ளி மறுமைகொள்ள மறுதளிக்கும் மனமே
மாவுலகில் மிகமயங்கி மதியிழக்கும் மனமே
தருநிகர்க்கும் தாணிதன்னில் திகைத்திருக்கும் மனமே
தாள்பணியப் பேர்வடுகன் தான்றருவன் பதமே
கருவளர்க்கும் கண்ணியமுள் கலிவடுக னவனும்
காலபாசம் தான்றவிர்க்கும் காலகால சிவனும்
அருமறைகள் அலறிநிற்கும் அணுவிலாடும் அணைவாம்
ஆபதுத்தா ரணனேற்றும் ஆதிவடுகன் றெழுவாய்.

---

இராகம்-முகாரி தாளம்-ஆதி.

சிதம்பர தரிசனமா நீயதைச் சிந்திக்கலாமா பரையா என்ற மெட்டு.

பல்லவி.

பதம்பெற வழிமனமே நீதினம்
பைரவ நாமா வுரையாய் (பதம்)

சரணம்.

இளமையிற் பயின்றிட இனிதிவன் நாமம்
இம்மையில் நேசங்காண் உண்மை ப்ரகாசம்
இப்போதே கொள்வாய் தப்பாதே
ஈசனைக் காண்பாய் தாசனே மாண்பாய் (பதம்)

சதுர்புஜம் மேவிய சாதுமனோஹரா
சதுர்மறை தேடிய சங்கரனேதான்
தேடாதே நீ வாடாதே
மாசிரத் தொடையோன் மாசிலா விடையோன் (பதம்)

சிவமய மங்களச் சின்மய நாதன்
தவமுனிகண்ட தத்துவ புருஷன்
சோராமல் பிழை நேராமல்
துதிசெய் செழிப்பாய் புவிபொய் யொழிப்பாய் (பதம்)

கொடுங்கிரி தன்னை யொடுக்கி யமர்ந்த
வடுகனும் பைரவ வளம்மிகு மண்ணல்
மாராமல் சுவை மாராமல்
மனம் நேராகக் குணக் கூராக (பதம்)

---

இராகம்-குரஞ்சி தாளம் மி-சாப்பு.

பித்தந்தெளிய மருந்தொன்றிருக்குது என்ற மெட்டு.

பல்லவி.

சித்தங் கனிந்தவி ருந்தொன்றிருக்குது
கொடுங்குன்றி லென்றேன் (சித்தங்)

அநுபல்லவி.

தக்கவிருந்திது கண்டாலும் முக்தியாம்
சொன்னேன் சொன்னேன் சொன்னேன் (சித்தங்)

சரணம்.

வானவர் தானவர் மாடுபெற்றேன்றேடி வாழ்த்தியுமடைந்தது
வாளுமுண்டுதிரு சூலமும்பாசமும் வாகனம் நாயுமுண்டு
பாலனுங்கண்டேனிஃ துண்மையென்றே பாசவிண்ட விருந்திவன்
பாதத்தில் விழுந்து கூவித்தொழுவீர் பாக்யமென்றுமவன்
வருவான் (சித்தங்)

பக்திமிகுந்தவர் காணலா மந்தோ பாரினில் மெய்யாமே
சித்தியளிக்கும் விருந்தாமிது நத்தியு மழைப்பீரே
முக்தியளிக்கும் மூலமுங்கூட்டும் முயற்சி செய்யுங்களின்றே
சச்சிதானந்த விருந்திது ஜன்மாந்த்ர பாக்யங் கண்டாலென்றேன்
(சித்தங்)

நாமமுரைத்தாலே யமபயமேது நான்முகன் படைப்புளெ
தப்பிதமில்லாமல் தஞ்சமென்றே கெஞ்சித் தாளில் சற்று விழுவீர்
காமமொடு மாயை சோகந்த விர்த்துமே ஆதரிப்பா ருண்மை
ஏமாறுது விரும்பி யழையுங்கள் ஈசனும் பைரவனே (சித்தங்)

---

இராகம்-மோகனம் ஏகதாளம்

அருமருந்தொரு தனிமருந்து என்ற மெட்டு.

பல்லவி.

மலைவிருந்தது உயர்விருந்தென் மனத்தாற் கொண்டேனே (மலை)

அனுபல்லவி

குருவிருந்துள மாடும்விருந்து குலாவுவடுகா னந்தவிருந்து
ஐவர்பகையை யுண்ணும் விருந்து ஆவியுள்ஞானஞ் சேர்க்கும்
விருந்து (மலை)

சரணம்.

பிரான்மலையி லமரும்விருந்து பிரார்த்தனை பறிந்தோர்க்கும் விருந்து
தீராவினைகள் தீர்க்கும்விருந்து தீவிரபக்தியிற் றோன்றும் விருந்து
(மலை)

தொண்டர் பணிவிடை கொள்ளும் விருந்து
தோகையாம் கெங்கை யிலாடும் விருந்து
கண்டவர் மகிழ்வுறக் காணும்விருந்து
கட்க சூலங்கை யேந்தும் விருந்து (மலை)

புத்திரதோஷ முண்ணும் விருந்து
பூரித்து சந்ததி யளிக்கும் விருந்து
முக்தியளித்திட வந்த விருந்து
மூழ்கியே யென்னு ளமர்ந்த விருந்து (மலை)

அமரர்புவன ரழைக்கும் விருந்து
ஆனந்தங்கொண் டாடும் விருந்து
அமரர் பணிந்தடி போற்றும் விருந்து
ஆபதுத்தாரணன் களிக்கும் விருந்து. (மலை)

இராகம் தன்யாசி தாளம்-ஆதி.

பெண்ணே ஈசன் சங்கதியை என்ற மெட்டு.

பல்லவி.

கண்டேன் நாதன் பைரவனை
காவற் சூலாயுத தைரியனை (கண்டேன்)

அநுபல்லவி.

கொண்டேனங்கப் புளகிதமே மனம்
கோணாது நற் சுகிநிதமே (கண்டேன்)

சரணம்.

நம்பினோர்க் கபயம் நளினமா யளிப்பவன்
நம்பிரா னசுரர் நவில்பகை யொழிப்பவன்
அம்புவி மீதினில் அடிதொழ ஜொலிப்பவன்
அருமருந் தாம்நற் கருணை தெளிப்பவன் (கண்டேன்)

மித்தையா முலகில் மிகுபத மளிப்பவன்
சித்தை யோம்பிடில் சிவபத மொளிப்பவன்
வித்தையி லார்க்கும் விரைவினி லளிப்பவன்
தித்தைத் தோமெனத் திகைத்திட நடிப்பவன் (கண்டேன்)

பிரமன் சிரமதைப் பிடித்துமே கொய்தவன்
திரமுடை ஞமலியைத் திருவாஹனஞ் செய்தவன்
பிறப்பிறப் பறுத்துப் ப்ருதிவியில் மெய்தவன்
திரவிய மென்றுடன் திரள்ஞானம் பெய்தவன் (கண்டேன்)

நாக ரத்னமென நாடிவரும் பக்தன்
ஆகம விக்ரக மாகச்செயுஞ் சுத்தன்
தாகமுற்றுத் தினம் தாள்பணியும் யுக்தன்
தேகத்தா லுழைத்துனைத் தேடியே நிற்கநித்தம் (கண்டேன்)

தேனுடியில் மூழ்கி தேவருந் தேடிடு
நானன நாதனை நாவினாற் பாடியே
தேனு மவனருள் தேர்ந்துடன் றேடியே
வேணு கானமொடு வியப்புடன் கூடியே (கண்டேன்)

ஆபதுத்தாரணன் ஆவலா யடுப்பவன்
தாபத்தைத் தீர்த்துடன் தாவியே யெடுப்பவன்
ஆபத்தி லோர்துணை யாடியே தடுப்பவன்
மாபக்தி யோடுற மாக்ஷிமை கொடுப்பவன். (கண்டேன்)

---

இராகம்-காகாப்ரியா தாளம்-ரூபகம்

ராம நீ சமான மேவரு என்ற மெட்டு.

பல்லவி.

தேவ ரா ஜதேவ சுகிர்த
தா ஜன்மோத் தாரக ஸ்ரீ (தேவ)

அனுபல்லவி.

தேவ முனு லந்த ரிகி
தல்லி தண்ட்ரி மித்ருடைன (தேவ)

சரணம்.

தாணி தாமு கநி யோக
தாமு நேம நிஷ்ட மார்க்க
நருலு தலசி ஜேர உக்ர
கிரிபை வாச திகம் பரேச (தேவ)

தாபமு தணிசி தப யோக
பாவமு கலசி யுன்ன காபு

ஆபதுத் தாரண ஹ்ருதய
வாஸுடைனஸ்ரீ பைர வாங்க (தேவ)

---

இராகம்-ராமப்ரியா தாளம்-ரூபகம்.

கோரின வர மோஸகு என்ற மெட்டு.

பல்லவி.

ஹே சிவமய வடுக நந்நு
எகிஞ்ச ராது (ஹே)

அனுபல்லவி.

தாசி ஸுக்ஷேத்ர தரணி லோ
காசி பதமு யாசிஞ்சிநி (ஹே)

சரணம்.

சுசி ஜஅசி பூர்வ புண்ய
சௌக்ய தோநு சகஜ நேம
வஸதி தோடு பெட்டி பாஷா
வர்ஷமு தோபைரவ
ருசிகா பஜனுங் கோசித
ராகவனபு கண்ய மிச்சி
பசிசுத டாப துத்காரணுநி
பாலிஞ்சின கன்ன தண்ட்ரி. (ஹே)

---

இராகம்-ஷண்முகப்ரியா தாளம்-ரூபகம்.

பல்லவி.

நிநு விநா கெதி லேதுரா
நநு பாலிம்ப ரா ரா வடுகா (நிநு)

அநுபல்லவி.

மனஸா கலசி மௌனமு தோ நீ
மகிம தெலிசி சுகமு கல்க. (நிநு)

சரணம்.

இதிஹாஸபு ராணமேமி
ஸ்ம்ருதி வாக்ய ஸ்ரவண மேமி
ப்ரதி பாக்யா நுபவலேநி
ம்ருது பாஷ்ய ப்ருதிவி சாலு. (நிநு)

பாப புண்ய பாச ரஹித
பூபு டைன பூர்ண புருஷ
ஆபதுத்தா ரணவிஹித
ஆஸ்ருதபரி பாலுடைன. (நிநு)

---

இராகம்-சுருட்டி தாளம்-ரூபகம்.

பஜன பருல கேல என்ற மெட்டு.

பல்லவி.

ஸ்மரண சுகமு கல்கு முக்தி
வாத வடுக நிந்நு நாம. (ஸ்மரண)

அநுபல்லவி.

பரத்வாஜ ஸ்ரேஷ்ட வம்ஸ
பாலுடை ஜன்ய தல்சி நாம. (ஸ்மரண)

சரணம்.

ப்ரதபூமி நிர்மாணமு கதி
பரம பக்தி பரவச தோ

பரிபக்வ சுப நிலலோ வுண்டி
நருலு ஜன்ம ரஹிதலு காக. (ஸ்மாண)

சரணம்.

சிக்ஷ லேநி வித்ய நாச
பக்ஷ லேநி வநித தாசி
பிக்ஷ ஈநி குக்ஷி பாத
பக்ஷ மேமி பக்தி தோநு. (ஸ்மாண)

மனஸு நீது பாத ஜோ
கநுலு நீது ரூப ஜூட
விநுலு திவ்ய நாமமு வின
நிநு கருண நெருபுன்ன நாம. (ஸ்மாண)

ஆகம லேநி ஆலய லேது
சாகச லேநி ஸாஸ்த்ரமு லேது
ஆகலி லேநி யாசக லேது
ஆபதுத் தாரண தாரக சாது. (ஸ்மாண)

---

இராகம்-செஞ்சுருட்டி. தாளம்-ரூபகம்.

கமல நயன வாஸு தேவா என்ற மெட்டு.

பல்லவி.

முக்தி நாதா சக்தி பாத
பத்ம ஜேரே பாக்ய மீரா. (முக்தி)

அனுபல்லவி.

முக்தி கலுக சக்தி யிச்சி
முக்தி மார்க்க சித்த மீரா (முக்தி)

சரணம்.

முக்தி மோக்ஷ புக்தி பக்தி
சக்தி வாத சித்ஸ்வ ரூபா
பித்து டைன பரம நிந்த
பக்தி தோறு பஜன ஜேய. (முக்தி)

ஆத்ம ரூபா நாத்ம ரூப
பாத்ர மைன பிர்ம ரூப
சாஸ்த்ர வேத சாக்ஷி ரூப
காத்ர சூல காக்ஷி பூப. (முக்தி)

நாம ரூப நாச லேக
காம தஹன கால கால
சாம ப்ரிய சாந்த மூர்த்தி
ஸ்ரீமத் சிவ சாம்பு டைன. (முக்தி)

தாப ரஹித தாஸ ஹிதஹித
பாப தஹன காபு டைன
ஆபதுத்தா ரணனு பையனு
தாப ஜேயு தேவ ராஜ. (முக்தி)

---

இராகம்-அமீர் கல்யாணி தாளம்-ரூபகம்.

நம்பினே னுன்னையே என்ற மெட்டு.

பல்லவி.

அண்டினே னுன்னையே அகிலாண்ட நாயகா பைரவா (அண்டி)

அநுபல்லவி.

சங்கானளி சதா வேசா
அதீதா அன்புள் நின்றவா. (அண்டி)

சரணம்.

புகழுன் பாதத் துணையே வேண்டும்
புறமு முள்ளு மொருமை யாகி
புனித னேயுன் கருணை வெள்ளம்
பாரில் நானும் மூழ்க வேண்டும். (அண்டி)

கலியு கத்தி லுனையே நானும்
கையினில் தெய்வ மெனவே நாளும்
கலந்து மேனி பழமை விண்டு
கறந்த பால தாக வேண்டும். (அண்டி)

மனமுறண்களை நீக்கி யாளும்
மகிமை குருகண் நோக்கி நாளும்
மறுமை யளிக்கும் மார்க்கத்தாளும்
மதித வழ்பூ வாஃஷித் தேவா. (அண்டி)

ஆபதுத்தா ரணனும் போற்றும்
ஆதி பிரான் மலையி லமரும்
ஆதிஜோதி பைரவா வுன்
ஆடும் பாதம் சரணம் சரணம். (அண்டி)

---

இராகம்-கமாஸ் தாளம்-சாபு.

மாத்தாட பாரதனே என்ற மெட்டு.

பல்லவி.

காசியில் விநோதனே கால பைரவா. (காசி)

அனுபல்லவி.

கங்கை ஸ்நானபலன் கண்ணிய மாயளிக்கும். (காசி)

சரணம்.

பாய்ந்துபி ரான்மலை பாங்கான காசிச்சுனை
பார்த்து முழ்கக்காசி பிரான்மலை யென்றுசொல்லும். (காசி)

மாறுத பக்திகொண்டு மாகூபிமை தென்கைலை
பாரோர் புகழ்பிரான் பாங்கான மலையமர். (காசி)

காதலாய்க் கத்தி சூலம் காக்க மந்தஹாசமும்
நாதனே கைப்பிடித்து நான்மறை யோரைக்காக்கும். (காசி)

ஆழிசூழ் வையகத்தில் ஆபதுத் தாரணன்சொல்
வாழியென் றேயெழுந்து வாளைச்சு ழற்றியாடும். (காசி)

---

இராகம்-தன்யாசி தாளம்-ரூபகம்.

கனக சபாபதி தரிசனம் என்ற மெட்டு.

பல்லவி.

நிற்குண சீலனே நித்யானந்தனே
நிர்மல சுக பைரவா. (நிற்குண)

அனுபல்லவி.

பக்தி பரவசமும் பக்தரிட நேசமும்
முக்திக்குகந்த ஞானம் முதலா யளித்திடும். (நிற்குண)

சரணம்.

சங்கரன் முனைச்சடையில் சலியாமல் வந்துதித்து
அங்கசுரர் சங்கைதீர்த்து அவர்சிரம் மாலைகொண்டு
தங்கக்காசி ராமேஸ்வரம் தனித்திருப் பத்தூரிலும்
மங்களமாய்ப் பிரான்மலையில் மகிழ்ந்தமர்ந் தெழுந்திடும். (நிற்குண)

இப்போதே நீநினைந்தால் இங்குமெங்குஞ் சொர்க்கமாம்
தப்பாது பக்தருக்கே தாணியி லேதருதல்

எப்போது முனக்கெளிது எனதுள்ளம் நீநில்லு
ஒப்பான முக்தியிது ஒத்தநல்ல சக்திநீதா. (நிற்குண)

எப்போது முனக்கடிமை என்றுழல் பக்தன்நான்
அப்போ தெனக்கடிமை விழிதந்த யுக்தன்நீ
எப்போதும் மறவேன்நான் என்பெரும் பாக்யம்நீ
முப்பாழுங் கடந்தவோ ரப்பா முலகிலாடும். (நிற்குண)

கலியுக மையாயிரங் கழிந்த விருபானேழில்
களித்திடு மாடிமாதங் கடைவெள்ளி நாளதனில்
கனத்த கபாலமாலை களித்தேற்ற பைரவா
கனிமொழி யாபதுத் தாரணன் கொண்டேற்றும். (நிற்குண)

---

இராகம்-ஆரபி தாளம்-ஆதி.

என்ன துணிவாய் என்ற மெட்டு.

பல்லவி.

நின்று கனிவாய்நான் திகைத்திடா மலுன்றன்
மலரடி பணிந்தேன் மெய்யா. (நின்று)

அநுபல்லவி.

பிரான் மலையில் வாசனே என்று முன்னையே நாடும்
மதிதனையே யடைந்துன் மகிமையை நாட்டில்விண்டும். (நின்று)

சரணம்.

குலைக்கிற நாயொன்று காவலாய்க் கூடுதே
குலாவுங் கணமுமென் கண்முன்னி லாடுதே
சூலங் கபாலமுன்கை கண்ணியந் தேடுதே
சூக்குமங் காணவென் நெஞ்சமும் வாடுதே. (நின்று)

உடுக்கையும் பாசமும் உலகினை யாட்டுதே
உடை நிர்வாணஞ் சகஜமாய்க் காட்டுதே
ஆடுங் காவாளது ஆசையை வாட்டுதே
ஆகா வலித்ததால் அஞ்சுவ தோட்டுதே (நின்று)

பாதாள நடன ஆதார ஸ்தலமதில்
பதினெட்டுப் படிதாண்டி பாங்குட னமர்ந்ததில்
அதிபதி யென்றுனை மதியுட னறிந்ததில்
கதிபெறு வழியுடன் துதிமிக நிலையதில் (நின்று)

ஆபதுத் தாரணன் சொல் ஆரபி பாடவும்
ஆடும் பிரமன்சிரங் கொய்சினம் வாடவும்
மாநிலங் காணநீ மாசிலா தாடவும்
மாயையை யொழித்து ஆதியைக் கூடவும் (நின்று)

---

இராகம்-ஆனந்த பைரவி தாளம்-ரூபகம்

வாரிருக்கு தோலிருக்குது வாங்கிக்கோள்வீரே என்ற மெட்டு.

சூலிருக்குது வாளிருக்குது சூக்ஷமம் கண்டரோ
சொர்ப்பனங்கள்
தானொழிக்கும் வாதிக்கும் பந்த மறுக்க
வடுகன்கை (சூலி)

நாயிருக்குது மாரில்சிரத் தொடை யதுவுங்
கண்டே னிவனிடம்
வாயுரைக்கின்ற எல்லை மனமும்
வாதழிய ஜோதிகாண (சூலி)

பைரவன் மாயை கொன்று
வைரி யேது மிலாதாக

தைரியமே தந்து காக்கும்
வையகத் துணைவனிடம். (சூவி)

---

பதம். இராகம்-கல்யாணி தாளம்-சாப்பு.

அப்படி இப்படி செய்ததற் கோப்பினேன் தப்பிதமேதில்லே

என்ற மெட்டு.

பல்லவி.

சுற்றிலும் முற்றிலும் பைரவ னல்லா
துற்றவரார் சொல்லு (சுற்றிலும்)

அநுபல்லவி.

சொற்றுணை யேயளித் துற்றுற வாடியும்
நற்றுணை தந்தெனைப் பற்றிடு வீரையா. (சுற்றிலும்)

சரணம்.

பாரினிலே யுந்தன் ஊரினிலே குந்தி
நேரினிலே நின்றன் மாரினிலே யன்று
போரினிலே பொங்கு வீறினிலே யுறும்
வேரினிலே யமர் சீரினிலே யையா. (சுற்றிலும்)

சோதனையே யைவர் போதனையே விண்டு
சாதனையே கொள்ளச் சேய்தனையே பெற்று
வாதனையே விட்ட நீதனையே நாடத்
தூதனையே தேடு நோதனையே விட்டேன். (சுற்றிலும்)

நாதத்தையே வென்று வேதத்தையே கொண்டு
சாதத்தையே தள்ளி மாதத்தையே யைந்து
பூதத்தையே நைந்த வாதத்தையே கொள்ளுஞ்
சேதத்தையே விள்வி நோதத்தையே சோ. (சுற்றிலும்)

180255

நாவதூற்று யன்று தேய்வதூற்றாய் விட்டு
தேவதூற்றாய் சொல்லிச் சாய்வதூற்று யன்று
ஈவதூற்று யென்று மோய்வதூற்றாய் பக்த
ஞபதுக் காரணன் பாவதூற்றாய் மெய். (சுற்றிலும்)

---

இராகம்-தேசிகதோடி. தாளம்-ஆதி.

உத்தா ரந்தாருமையா என்ற மெட்டு.

Q23'-4(7
N29

பல்லவி.

உற்று ராருமில்லையே துணை
புறுவது முன்னை ஜகபதி வடுகா. (உற்று)

சரணம்.

சொத்தொடு சுற்றமும் நீயே பாரினில்
நித்தியங் கொள்ள நினைவுறு மெனக்கு. (உற்று)

குவலயம் முற்றிலும் கூட விருந்தாலும்
கவலை யொழிக்கக் காதல் கொள்ளாது. (உற்று)

பன்முறை புகன்றேன் பங்கஜ லோசன
என்முனம் நின்று எக்கந் தணிப்பாய். (உற்று)

இங்குமெங் குழனை இயங்கிடக் கண்டேன்
பொங்குமுன் காருண்ய பொக்கிஷம் வேண்டும். (உற்று)

---

இராகம் பூரிகல்யாணி தாளம்-ரூபகம்.

சற்றே விலகியிரும் பிள்ளாய் சந்நிதானம் மறைக்குதாம்என்ற மெட்டு.

பல்லவி.

உற்றே னகில மதில் வடுகா உந்தன் நாமமுரைத்துமேநான் (உற்றே)

அநுபல்லவி.

பொற்பதம் பெறவு மற்புத னுனையுற்றேன்நான்
கண்டு நிற்கிறேன். (உற்றே)

சரணம்.

பாரினிலுறவு நீயென்றேன் பக்தன்
பணிந்துமே நின்றேன்
நாரி லாதுமலர் தொடையோ
நானும் வந்தேன் மாலை போட்டேன் (உற்றே)

மாலையிட்டான் மறவாதே
மருவிக்கலந்து சேர்ந்துநீ
சால சக்தி சிவனைப்போல
சந்ததமுட னிருவகையிலே. (உற்றே)

கட்டியணைத்து நின்றவுன்
காக்ஷிபார்த்து நின்றனன்
கண்டுட் குகையி லுனதுபிம்பம்
கொஞ்சு மழகைத் தினமுங்கண்டு (உற்றே)

ஆதிரை தினமதி லாடிய
பாதனு யுந்தனைக் கண்டுமே
ஆபதுத் தாரணன் பணிந்து நின்று
மாபக்தி யோடுறப் பரவசமாகி. (உற்றே)

---

இராகம்-சங்கராபரணம் தாளம்-ஆதி

நந்தன் சரித்திர மானந்தம் என்ற மெட்டு.

இன்பம் தரிசன மேயின்பம் பாரில் பைரவ
வன்பன் நித்யசுக நண்பன் காணக் காண. (இன்பம்)

தருமம் தழைத்திடு முயர் கருமம் நடுவ னேட்டும்
சிம்மம் துணைவன் வருஜன்மம் நீக்கக்காக்க. (இன்பம்)

சோம னிணையிலா தோர்பூமன் பாசம் விலக்கும்
நேமன் இனிது இவன் நாமம் துதித்தக்ஷணத்தில். (இன்பம்)

தேடி வடுசன் புகழ் பாடி பழுதிலாது
பாடி ஜகமதிற் கொண்டாடி வாழுவேதந்த. (இன்பம்)

பக்த ஜைபதுத்தாரணன் பாட சக்திசிவா நீயுமாட
முக்தி நாதா சாக்ஷிசித்தம் தானதாய் நின்றாட. (இன்பம்)

---

இராகம்-பியாகு தாளம்-ஆதி.

ஞாயந்தானே நீர் சொல்லும் என்ற மெட்டு.

க்ஷேமந்தானு ஒ வடுகா நாய் கொண்டதேவா
கட்கசூலம் ஜொலிக்குதே. (க்ஷேமந்தானு)

சரணம்.

காதலி யில்லாக் களைப்பு ஓர்
கந்தைத் துண்டுமில்லை இளைப்பு இன்ப
சாதகம் பெறவும் நினைப்பு நல்ல
சகுன மாச்சுது அழைப்பு குரு. (க்ஷேமந்தானு)

பிரான்மலை பங்குறும் தாதா பாரில்
பிறப்பிறப் பகற்றும் நீதா அண்ட
சராசரம் போற்றும் பாதா அண்டி
சந்ததம் பணிந்தேன் நாதா குரு. (க்ஷேமந்தானு)

அடியேனுக் குண்டுப தேசம் உந்தன்
ஆக்ஷியிற் கொண்டப்ர காசம் கண்டு
அடியிணைப் போற்றும் நேசம் சொல்ல
அன்புமிக்கு வந்தேன் தாசன் குரு. (க்ஷேமந்தானு)

ஆடிய பாதப்ர காசா அன்பு
ளாடிய பக்தர்விஸ் வாசா உக்ர
மாம்கிரி தன்னில்ப்ர காசா பக்த
ஜைபதுத் தாரண ஹ்ருதய வாசா குரு. (க்ஷேமந்தாந)

---

இராகம்-கௌளிபந்து தாளம்-ஆதி.

நமக்கினி யமபய மேது என்ற மெட்டு.

பல்லவி.

பிறப்பிறப் புனக்கினியேது புகழ்பைரவ னடிபணிசாது (பிறப்)

அநுபல்லவி.

சாண் வயிற்றிற்காக சதுர்மறையையும் விட்டு
சாஸ்திரம் வழுவாத சதாத்யான மடுக்க. (பிறப்)

சரணம்.

இல்லற தருமம் இணையுண்டோ சொன்னேன்
மெல்லியர் மாயையில் மெலிவடை யாதுதப்பு. (பிறப்)

அறுசுவை யருந்தியு மானந்தங் கொண்டிரும்
பெருமையை யொழித்து பைரவனைத் துதிக்க. (பிறப்)

சிவஸ்வ ரூபனசுரர் சிரமாலை யணிந்த
சிவசக்தி பைரவனைச் சிந்தைமகிழ்ந் தடுக்க (பிறப்)

நாரத சேவிதராம் நடன விநோதனும்
சாரதியாய் வந்து சரீரமும் நடத்த. (பிறப்)

அசுரரை யொழித்து ஆனந்தந் தழைத்தெழும்
மாசிலா பைரவன் மனத்தகத் திருக்க. (பிறப்)

ஆதியந்த மிலாத ஆறுதியும் வந்துள
ஜோதியாய் விளங்கிபுட் சோர்வுயர் வகற்றிட. (பிறப்)

---

இராகம்-செஞ்சுருட்டி தாளம்-ஆதி.

சிதம்பரம் போகாம லிருப்பேனே என்ற மெட்டு.

பிரான்மலை போகாம லிருப்பேனோ நான்
பைரவன் நாமத்தை மறப்பேனோ. (பிரான்மலை)

மங்கையும் பாகரும் மணக்கோல மங்கே
தங்கிய வகஸ்தியர் தரிசித்த தங்கே. (பிரான்மலை)

முயற்சித்து தேவர்கள் முப்பத்து முக்கோடி
வியப்புடன் கூடிய விழலிலா நாடு. (பிரான்மலை)

ஈராரு மாதமும் திருவிழா வுண்டு
ஈஸ்வர ஸாநித்யம் இயல்பாக வுண்டு. (பிரான்மலை)

பேசிடுந் தெய்வம் பைரவன் கண்டேன்
காசினியி லின்பம் காதலாய்க் கொண்டேன். (பிரான்மலை)

பிறந்தது வளர்ந்தது பிரான்மலை யன்றோ
பிறிந்ததும் பிழைப்புக்குப் பிசகில்லை யன்றோ. (பிரான்மலை)

ஆதிரைத் திருநாள் தாசிகள் தண்டனை
ஆதியைப் பெறும்நாள் ஆதலால் வேண்டினேன். (பிரான்மலை)

காசிச்சுனை மூழ்கிக் காதலாய்த் தரிசித்தார்
மாசிலா தீசனை மகிழ்வுறப் பெறுவார். (பிரான்மலை)

பெயரிலா மரமொன்று பொருத்தமா யங்குண்டு
சுயம் ப்ரகாசனின் சூட்சியு மதிலுண்டு. (பிரான்மலை)

---

இராகம்-மாஞ்சி தாளம்-சாப்பு.

வருகலாமோ அய்யா என்ற மெட்டு.

பல்லவி.

பருகினேனே வடுகா உந்தனடி முடி
கொண்டு நின்றாடியும் கூடியும் கொண்டு. (பருகி)

அனுபல்லவி.

பருகிய வானந்தம் சொல்லுவே னின்று
தாணி செழித்தாடு மின்பமே சொந்தம்
வருவே னுந்தன் போமு துண்டுநா னின்பம். (பருகி)

சரணம்.

தேகமோர் மாமிச மூட்டையாம் இதில்
தென்புள்ள வைவரின் சேஷ்டையாம்
சோகம் மோகம்நடை பாட்டையாம்—உயர்
ஜீவன்முக்த ரமர் கோட்டையாம்—பைரவன்
கட்டியம் கைதரும் நாட்டியம்—காக்ஷி
ஆபதுத்தாரண னநுதினம் நாட்டமாய். (பருகி)

---

ஓ ஐய ஜகதீசா என்றமெட்டு.

ஓ சிவசிவ வடுகா சுகதும்புரு நாரத வந்தித பாதா. (ஓசிவ)

பிரான்மலை வாழும் பைரவா நாளும்
ப்ரார்த்திக்கு மென்னைக் கொண்டாளும்
அன்புட னழைத்தீ ரென்று வந்தேன்
பைரவா வுன்பலங் கொண்டு வந்தேன்

அன்புட னுனதடி தொழு தெழுந்தேன்
ஆனந்த பாஷ்பம் சொரிந்தமர்ந்தேன்
உக்ரகி ரீசனமிர் தேஸ்வரி கண்டேன்
ஊக்கமா யனுமதி பெற்றுவந்தேன். (ஓசிவ)

பிரமன் படைத்திட்ட சடலத்தைத் தூக்கி
இரு வினைப்பயனை யொழித் தோட்ட
ஈசனுருவை யுடற்கூட்டி
ஏறு மயிலவன் றுணை கூட்டி
வரும் சுதன் கைதாரும் ஜன்ம சாபல்யந்தாரும்
வாழ்த்தியுன் காருண்ய மழை நனைந்தேன்
உந்தன் பக்தியாம் வலையில் வீழ்ந்தேன்
ஊறிய பக்தியா லுன்னை நனைத்தேன். (ஓசிவ)

வறுமையை யொழித்து வளம்பெற ஜொலித்து
கட்கமொடு டுக்கை டக்கை யடுத்து
காதலாய்ப் பாசம் கரமதிற் பிடித்து
சூலங்க பாலம் சூக்ஷ்ம மாயடுத்து
ஆலமுண்டு அனுதியாய் நின்று
ஆதரவளித்த ஆர்கலி ப்ரபுவே
ஞமலி வாகனு நற்சிரத் தொடை மார்பா
ஞாலம் புகழ்ந்திடும் ஞெகிழி தாகுனு. (ஓசிவ)

ஆபதுத் தாரணன் ஆதியைத் தொழுது
ஆடிய பாதத்தைக் கண்டு களித்தேன்
ஆனந்தக் கூத்தை யுண்டு செழித்தேன்
ஆதிரை நடித்த துண்டு விழித்தேன்
பொங்கித் ததும்பிடுங் கருணை குளித்தேன்
என்னு ளமர்ந்திட நமனதேது

உக்கிரி ரீசனமிர் தேஸ்வரி கண்டேன்
ஊக்கமா யனுமதி பெற்று வந்தேன். (ஓசிவ)

---

இராகம்-பியாகு தாளம்-ஆதி.

இதுதானே தில்லை ஸ்தலம் என்ற மெட்டு.

பல்லவி.

இதுதானு ஆத்ம வித்தை
இப்போது தானறிந்தேன். (இது)

அநுபல்லவி.

இதுதா னிதுதானென் றுணர்ந்திட நாய்தன்னை
இதம்பெற வாண்டிது இணைமனமாளு மென்றீர். (இது)

சரணம்.

த்வார பாலக ராம் கண்கள் மத்தியில் நடை
மாறும் நாசிபோல் வாயில் மாண்பாமென வமர்ந்தீர். (இது)

---

இராகம்-மத்யமாவதி தாளம்-சாப்பு

பல்லவி.

பிரான்மலை யேனிங்கே வாரும் வடுகா
பிசகொன்று மென்றே வந்துசேரும். (பிரான்

அநுபல்லவி.

பாச தண்டமணி கொடுங்குன்ற வாழ்வே
பக்தனுக் கிறங்கினல் பாங்காய் நாய் வருமே. (பிரான்)

சரணம்.

அப்பா வந்ததனுல் குக்ஷிகுறை யாதுதேறும்—சொன்னேன்
மயக்கம் மலேயி லென்ன
வைகை பார்த்திட வந்தே சேரும்
சொற்படி நடந்தா லெங்கள் பாக்கியம்
சொத்து சுகத்தி லென்னசி லாக்கியம்
செப்புநல் முத்தையி ழைத்ததோர் வாக்கியம்
ஓடி வருகின்றே னென்றெழும் யோக்கியம். (பிரான்)

அரும்பசி யென்றுலுந் தேடுமோ புலிபுல் வாதமா—விண்
களித்தகம் மகிழு
முன்னடி முடிக்கிது சேதமா—நின்று
விரும்பி யழைக்கின்றேன் நீதமா
வேகமாய் நடந்திடலாமிது காதமா
கரும்பு தின்றிடக் கூலியென் வாதமா
காசி ராமேஸ்வரம் நடவாப் பாதமா. (பிரான்)

சத்துரு யென்ற னகத்தினுள்ளெழுந்தந்தையே சிவா—பாரில்
மிஞ்சிட வந்துனேக்
கெஞ்சியு மழைத்திட்டேன் வீசிவா
நிர்க்குண சீலா வுனேயேற்க வலிக்குமோ
நல்லாபதுத் தாரணன் மனமும் சலிக்குமோ
அற்புதப் பொருளே உன்னுணுவம் பலிக்குமோ
அப்படி இப்படிப் பேசிடக் கெலிக்குமோ. (பிரான்)

---

இராகம்-பைரவி தாளம்-சாப்பு.

பல்லவி.

பக்தன்நின் றழைக்கிறன் போய்வாரேன்
அவன் பக்கத்திலிருக்க வேண்டும். (பக்தன்)

அநுபல்லவி.

பதம் பெற நினைவுறும் சுதனே சொந்த மல்லோகாண்
பாரினி லிவனெனைப் பாக்கியமென் றுளம்பற்றி. (பக்தன்)

சரணம்.

துக்க மொழித்தும்பர் புக்ககமடுத்து
மிக்கக் களித்துமன மொக்கத் துதித்துகுணம்
மிக்குத் துதித்துமனம் நெக்கித் துதித்துமுனம்
சிக்கை யொழித்து வளம் டங்கையடுத்த என்னை. (பக்தன்)

---

ஆனந்தக் களிப்பு.

இனிச்சுமக்க முடியாது தேகம் என்ற மெட்டு.

இனி ஜயிக்க வியலாது ஐவர்—என்னை
மனத்தமரும் வடுகா கனிந்தசிவ போகா. (இனி)

ஜயத்தினை லணிந்த திருநீறு—ஜன்ம
சாபல்ய முகந்து தரும் ஜாதித்திரு நீறு
ஜயக்கொடி யேயாந்திருநீறு—என்றுஞ்
சிவனடிக ளுறிமையென வணிந்த திருநீறு. (இனி)

சிவநாமா வுரைக்குந் திருநாவு—காண்
சிவவடுகத் தேனருந்தும் பாரில் திருநாவு
சிவயோகி கட்கேது சாவு—மண்ணில்
ஜயபேரி கைகொட்டுஞ் செல்வத்திரு நாவு. (இனி)

சிவநடன மேகாணு மிக்கண்—கண்டு
சிந்தையதில் வரைந்து நிற்குஞ் சிற்பியா மிக்கண்
சிவபக்த ரேதேடு மிக்கண்—உயர்
முக்தி மார்க்கமே முனைந்து நிற்கு மிக்கண். (இனி)

சிவபக்தி முகருந்திரு நாசி—சதா
சின்மயமா யுணர்ந்து சுகமதுவும் பேசி
சிவஸ்வாஸ மேயோம்பும் நாசி—சக்தி
சிவமய மானந்த மணந்தங்கும் நாசி (இனி)

பைரவனைப் பணியுந்திருச் சென்னி—நண்ணிப்
பரம்பொருளை யேதினம் பறிந்தேற்குஞ் சென்னி
பைம் பொன்னைச் சுமக்குமோ எண்ணி—சொன்னேன்
பைரவன் சேவையாற் பரம் பெறுஞ் சென்னி (இனி)

மருவில்லா ரோஜா யெடுக்குங் காங்கள்—நல்ல
மல்லிகை முல்லை மலர்கொய்யுங் கரங்கள்
அருமையாய்ப் பூஜிக்குங் காங்கள்—மெய்யாம்
பைரவனை நோக்கிப் பணிசெய்யுங் கரங்கள். (இனி)

பிரான்மலை பழனி நடக்குமோ ரங்கம்—வடுக
பைரவன் சந்நிதி வலம் வருமங்கம்
பிரார்த்தனை செலுத்து மோரங்கம்—ஆகப்
பிழை செய்ய முடியாது பிதற்றினு மங்கம். (இனி)

வடுக த்யானமே வழிபட வுணவு—கொண்டேன்
வயிற்றுப் பசிப்பிணி வன்மை காருணவு
நடுவனை ஜயிக்கும் நல்லுணவு—மறு
ஜனன மகற்றிடும் ஜகமெச்சு முணவு. (இனி)

சூக்ஷ்ம சரீரம் வளர்க்குமாம்—பாரில்
சொத்து சுகமெனும் ஜோதியிற் சேர்க்குமாம்
சூக்ஷ்ம மறிந்தவர் காக்குமாம்—கொண்டு
சாதகஞ் செய்திட்டேனிவ் வாகார மேற்குமாம். (இனி)

மலஜலந் திப்பியு மேது—அந்தோ
கலகலத் துடற்கட்டு விடுவது மேது

புலனைந்தும் முறண்டிட லேது—திண்ணம்
புனிதமாகுமே ஜன்மம் பிறப்பிறப்பேது. (இனி)

---

இராகம்-அடாணா தாளம்-ரூபகம்.

பல்லவி.

பிரான்மலை வாழ்நிதியே சொர்ண பைரவா
அரிய தேகம் நின் னாலயம். (பிரான்மலை)

சரணம்.

இதய குகை புணதிடமா—மிதற்கு
இரண்டு நாசிகள் வாயிலாம்—கண்கள்
இரண்டுங் கட்டியக் காரராம்—மனநாய்
இதம் பெறும் வாகனமாம் ஈச விஸ்வாசா. (பிரான்மலை)

கரங்களிரண்டுங் கட்கசூலமாகுமே
நலங்கொள் பற்களெண் ணான்கும் நாவொன்றோடு
நடமிடு முப்பத்து முக்கோடி தேவர்கள்
களங்கமில்லை நற்கபாலமு முண்டு. (பிரான்மலை)

---

இராகம்-ஹிந்துஸ்தான் காபி தாளம்-ஆதி.

தசரத ராஜகுமாரா என்ற மெட்டு.

சொர்ண பைரவ நீதா வருவாய் கரந்தருவாய்
சிவனுருவாய்ப் பதமருள்வாய். (சொர்ண)

சுகம் நல்கிடும் குலசம் ரக்ஷக நேயா
அகம் புகும் தோத்திரமது நீயருள் பாத்திரம்

உகந்தளி யிதுவே புவியுளென் னாத்திரம்
கனவிலு முன்னெண்ணம் நினையே
தனித்துணையே எனையணையே உன்றுணையே. (சொர்ண)

சூல தண்டமணி கொடுங்குன்ற வாழ்வே
ஆல முண்ட தாண்டவா சிவா வருள் வேண்டும்
பாலன் தினந்துதிப்பே னுயர்பதம் வேண்டும்
சமய மிதாம் சொன்னேன் குருவே
குலகுருவே எனதுறவே இன்புறவே. (சொர்ண)

திகம்பர ரஞ்சித செஞ்சடை வேஷா
இகம்பரந் தந்தெனை ஆசிகூர் நாதா
நகஞ்சதை நிகர்க்குமுன் நேயமே தாதா
ஆபதுத் தாரணன் போற்றும்
கனிந்தேற்றும் மனந்தேற்றும் முன்தோற்றும். (சொர்ண)

---

## திருத்தாண்டவம்.

அண்டம்நீ பண்டம்நீ பிண்டமும்நீ
அண்டமுள வாருயிர் யாவையும்நீ
அண்டவுற வானதும் அண்டியதும்நீ
அறுமறைசொல் லப்பெறும் பேருரும்நீ
கொண்டமுத லந்தினையுங் காத்திடாய் நீள்
கொடுங்கிரி யண்ணலென்றன் குணக்குன்றேநீ
பண்டும்நீ பற்பம்நீ பற்பத்தும்நீ
பாழும்நீ மாவடுக பைரவன் நீயே.

---

இராகம்-ஹிந்துஸ்தான் காபி தாளம்-ஆதி.

குஞ்சு மனக்குறத்தி மனமோகனாங்கி என்ற மெட்டு.

அன்புமிகத் துதித்து சிவயோகந் தாங்கி
அன்புகொண்டே னெனதகம் புகும் சோதரா

ஹர ஹர சிவ ஜகபதி யாக மதில் நிகழ்
அருப்பத மதுகொடு கமழ்மிகு புகழ்புனை
அதிபதி கதிதரு மதிநிதி
நிகழ்கலி யதிலுறை குண, சுரபதி வடுகா தினம் (அன்பு)

---

## பைரவகீதம்.

### ஆனந்தக்களிப்பு

பிரான் மலையிலே வடுகா
இரா நின்றவா

வீரூ வேசனே வடுகா
வீடருள் வாயே

தேனாடியிலே வடுகா
தேடி மூழ்கியே

உக்ர கிரீசனை வடுகா
உற்று தரிசித்தே

அமிர் தேஸ்வரியை வடுகா
அமர்ந்து தரிசித்தே

மலைச் சரிவிலே வடுகா
மந்த ஹாஸமாய்

மங்கை பாகரும் வடுகா
தங்கி யருகிலே

நிற்க வந்தனை வடுகா
நின்று வணங்கினால்

வணங்கு மெல்லோர்க்கும் வடுகா
வந்திடும் மோக்ஷம்

என்று சொல்லியே வடுகா
எஞ்சிநில் தேவா

அகில நேசனே — வடுகா
அருள் கொடீசனே

ஆளும் பைரவா — வடுகா
ஆடும் பாதனே

இங்கிதப் பொருளே — வடுகா
எங்கும் நின்றவா

ஈச னுருவே — வடுகா
வீசி நின்றவா

உடுக்கை ஈசனே — வடுகா
உள்ளந் தங்குவாய்

ஊத்தைச் சடலமே — வடுகா
காத்தி ரக்ஷிப்பாய்

எங்கும் நின்றவா — வடுகா
என்னு ளமர்ந்திடாய்

எற்றும் நாதன்நீ — வடுகா
தேற்ற லுன்கடன்

ஐந்தின் றொழிலையும் — வடுகா
நைந்திடச் செய்வாய்

ஒக்கக் கலந்திடாய் — வடுகா
ஒத்து நிற்பாயே

ஓம் காரத்திலே — வடுகா
ஓர்மை யளிப்பாயே

ஆபதுத் தாரணன் — வடுகா
ஆதி நேயனே

---

தானதத்தன தானதானன தானதத்தன தானதானன
தானதத்தன தானதானன—தனதான

சூடுநற்சிர மாலையேபுனை சூலுடுக்கையொ டாடுஜோதியை
சூழுமச்சிவ வேடநாதனை—நினைவோடு

சூதகத்தினை யேவியேயறி வோடிணைத்ததி தாசர் நேசனை
சேயனைத்தனை தாவியேயமு—துணலே போல்

நாடுபெற்றிரு மாயையேவிடு நாயிலுற்றவ னுதியேயடை
நாமம்நித்தமு ளாடியேபுன—துணவாக

நாவினுத்தம மாறுமாசுவை நாவடக்கமு மானபோஜனம்
நாடியுற்றவன் வீணனுவது—மிலைநீதி

பாடுபட்டவ னுதிகாணுவன் வீடுபெற்றிட வேதமோதிய
பாதை பற்றிடு பாதமேபெறு—எனவேநீ

பாலனுக்குப தேசமேசெய வேலனுக்குறு தாதையானது
போலெனக்கொரு தாதையாகியும்—வடுகேசா

கூடுபெற்றுள மாடியேபுல காடுசக்தியி னுவியாயொரு
கோடிசுற்றமு மாகவேபுவி—வருவாயே

கூவுபக்தரி னோசையேசெவி யாவலுக்கிசை நாதமேயனு
கூலபொற்பத மாடவேயருள்—புரிவாயே.

---

தந்தா னந்தா தந்தா னந்தா
தந்தா னந்தா—தனதான

சந்தே கந்தீர் சங்கே தந்தா
சம்போ கங்கா—தரநேயா

சம்பா ரம்பே ரன்பா மென்றே
தந்தா ளென்றே—னுமைபாகா

வந்தே னிந்தோ தந்தா னந்தா
வந்தா ளின்றே—விடையேறி

வண்டா யுண்டே னுன்றே னன்பே
கண்டா குஞ்சீர்—புகழ்பாடல்

அந்தோ! நின்று டங்கா கண்பார்
கண்டே னஞ்சே—னுருமாறல்

அஞ்சே னஞ்சே னஞ்சா துன்பால்
வந்தே னிந்தோ—வடுகேசா

தந்தே னென்றே வந்தா னந்தா
தன்போ கந்தா—பெறுவேனே

தன்றே னென்று யென்றே கந்தா
னங்கா டும்ப்ரான்—மலைவாழ்வே

---

தந்தா தனதன தந்தா தனதன
தந்தா தனதன—தனதான

அன்பே யருமறை யன்பே உறமுறை
அன்பே யுயாமு—தறிவாயே

அன்பே யுயிர்நிலை அன்பே உளநிலை
அன்பே உலகிய—லறிவாயே

அன்பே யறுமுக னன்பே கரிமுக
னன்பே யரியா—னறிவாயே

அன்பே அருள்முத லன்பே அறமுத
லன்பே சிவமய—மறிவாயே

அன்போ டுழல்பவ னன்பா யுழல்பவ
னன்பா முருசிவ—வடுகேசன்

அண்டா யனுதினம் வண்டா யுழலிக
முண்டே பரமுடன்—மனமேகீ

அன்பா மறிவொடு சம்போ சிவவடு
கன்பேர் மொழிமொழி—விழலேது

அன்பா லுயர்பத மின்றே தாவரு
என்பா புனதுள—முறைவானே

---

தான தந்தன தன தான தந்தன தன
தானதந்தன தன—தனதான

சாது சங்கமா சிவ காமி சுந்தரா தனி
மாதி லங்கிடா வதி—சயமேது

ஜால மிங்கிதோ புவி காண வந்ததே மொழி
ஆல முண்டவா தொடை—சிரமேது

மாது கங்கையே சடை மீதி லங்கிடா சுட
ரேது வந்ததோ குழை—யொளியோ சொல்

மாயை விண்டவா சுக வாயு டந்தவா கனி
வாயில் நின்றவா இக—பரநேயா

வாது கொண்டுமேயசு ராதி விண்டவா சுர
நாதனென்றவா விடை—யிலேயேது

வாக னஞ்சுவா னமு மாக நின்றவா சிவ
போக சுந்தரா புவி—யினைநாட

கோதி லங்கின லுல காயு மென்பதால் விடை
போது தந்திடாய் புகழ்—குறையாது

கோறி நின்றசே யிரு கோது விண்டேனே யிது
தேறுமன்பனே சிவ—வடுகேசா.

---

இராகம்-நாதநாமக்கிரியை தாளம்-ஆதி.

தேவ ராஜா தேடும் பாதந்தா (தேவ)

தேவ தேவதே வேசநி கம்பா
சேவை மேவவில முண்டறி பாரில் (தேவ)

கட்கமொ டுடுக்கைக் கப்பறைக் காமுடை
கற்பகத் தருகலி காக்ஷியிற் பூத்த (தேவ)

கூர்மிகு சூலமுங் குணமுள பார்வையும்
ஓர் சிரமாலையு மேந்திய நாதா (தேவ)

செஞ்சடை நஞ்சணி வெஞ்சின நஞ்சுணி
அஞ்சலி மிஞ்சிய எஞ்சிய நாதா (தேவ)

கண்ணிய புருஷா கார் மேகருத்ரா
கண்ணொளி யண்ணலே சின்மய நாதா (தேவ)

ஆதிரை தினமதி லாடிய பாதா
அனந்த பைரவ ஆதார நாதா (தேவ)

பிரமன் படைப்பில் பிறப்பிறப் பகற்ற
ப்ருதிவியில் மெய்யாய்ப் பிரான்மலை நின்றவா (தேவ)

எங்கும் நிரைந்தவா என்குரு பைரவா
என்துணை பக்தியை யேற்றளி நாதா (தேவ)

நாரத சேவித ரான சிங்கார
விசேஷ விநோத சிவேச சுவேஷா (தேவ)

தன்னை யறிந்துதன் தலைவனறிந்திட
தத்துவ மூட்டிய நித்யானந்தா (தேவ)

நாய்மன மோயும் வாய்மை புகட்டிட
நாய்தனை வாகன மாய்ப்பெறும் நாதா (தேவ)

பார்புகழ் காசியில் பாத்திர மறிந்திட
பாவனை கொள்கால பைரவ நாதா (தேவ)

ஐம்புல வேட ரலைந்திடு கானக
கைமுதல் ஜோதியிற் களித்துடன் சேர (தேவ)

ஒன்பது வாயிலா மோர்புலால் கோட்டை
அன்புள சிம்மா சனபதி சேர (தேவ)

சஞ்சலம் மிஞ்சிய வைஞ்சுக பாசம்
எஞ்சிய திரைகடல் விளைபொருள் சேர (தேவ)

மண்ணொடு பெண்பொன் மாயை யுறைகடல்
கண்ணிய விளைபொருள் காண்சிவம் சேர (தேவ)

பைரவனே சிவம் பரப்ரும்மமே சிவம்
பரஞ்சோதியே யிவன் பாதத்திற் சேர (தேவ)

சத்குரு பைரவ சத்குரு பைரவ
சத்குரு பைரவ சத்குரு நாதா. (தேவ)

---

இராகம்-மத்யமாவதி தாளம்-ஆதி.

ஜய ஜய வீராதி வீர வந்த்ய
மா வீரபத்ர ஸ்ரீ பைரவ நிலையே (ஜய ஜய)

பைரவ ரஞ்சித கையமு தண்ணலே
கைலையங் கிரியன் முனைமுகம் வந்து
பிரமன் சிரமதைப் பிடித்துமே கொய்து
செறுக்குடன் விண்டநற் சூலாயுதா (ஜய ஜய)

கொடுங்கிரி தன்னில் ஒடுங்கி யமர்ந்து
தடுத்தாட் கொள்ளவே அடுத்தா ரிதயம்
தொடுத்தாடு மோர் அடுத்தாள் வடுக
நெடுங்கொடையோய் நீள் சூலாயுதா (ஜய ஜய)

சதுர்புஜம் மேவிய சாது மனோஹரா
சதுர்மறை தேடிய சாதுர்ய நேயா
மதுரமாம் சேவை மதி புலனறிந்துடன்
கெதி பெறுதுதிதனி லமிழ்ந்திட வா (ஜய ஜய)

சிவமய மங்களச் சின்மய நாதா
சிரமதின் றொடைபுனை சுரபதி நர்தா
தவமுனி நரர்சுரர் பவவினை விண்டிட
நவவழி யுள்ளகம் தவழ்ந்த சிவா (ஜய ஜய)

செங்கதி ரஞ்சிடு செஞ்சடை ஜோதிக்கு
அங்கொடுங் கிரிவா ழுஞ்சலி மூர்த்திக்கு
மங்களம் மங்களம் ப்ரும்மானந்த
மங்களம் மங்களம் வடுகேசனுக்கு (ஜய ஜய)

பக்ஷிக்கப் பழந்தேங்காய் பல்வகைக் கனியொடு
பக்ஷண வகைபல் பல வளித்தேன்
தக்ஷண மேற்றளி குக்ஷியின் நிறைவதில்
அக்ஷய மெனமொழி லக்ஷியம் நாதா (ஜய ஜய)

கக்ஷிகள் பலவுள குக்ஷியினியல் பொன்று
லக்ஷ்மி களைமிகும் லக்ஷியம் நீயே
ரக்ஷித் தருள்புரி கச்சற் றருள்புரி
விலக்ஷண னந்தா லக்ஷண புருஷா (ஜய ஜய)

ஆழ்ந்துனைக் கண்டெனை தானந்தக் கண்ணீரால்
ஆய்ந்துனை நனைத்துத் தோய்ந்த பக்தியெனும்
வாய்த்த நன்மலரால் தோத்திரம் பலசெய்து
ஆற்றிய ருச்சித்தேன் ஊற்றளி நாதா (ஜய ஜய)

ஐம்புல நிவேதனை யன்புட னளிக்க
அம்புஜம் சேர்த்தகம் ப்ரும்மாஸ் மியென

நம்பிடும் வித்தையில் நன்மதி யளித்த
அம்பல வாணனை் ஆடியபாதா (ஜய ஜய)

கிராம்பொடு வாசனைத் திரவியஞ் சேர்ந்த
தாம்பூல சலனம் தான்பெறும் மங்களம்
சாம்ப்ராணி தூபம் ஓங்கார கற்பூரம்
மாண்பாம் ஹாரத்தி மாக்ஷிமை யேலாய் (ஜய ஜய)

---

இராகம்-உசேனி தாளம்-ஆதி.

ஜய ஜய ஹாரத்தி மா வடுகேசா
ப்ராண்மலே வாழ்சுக பைரவ நேசா (ஜய ஜய)

சூலாயுதஸ்ரீ சூக்குமானந்தா
சுகப்ரும்ம ஸ்வரூபா சோபித வரதா (ஜய ஜய)

உக்ரகிரீசனே டுற்றகோ ரமிர்தாளும்
மிக்க மங்கை பாகர் மத்தியில் வாசா (ஜய ஜய)

தென்புரம் வாயில் திண்ணமாய்க் கொண்டுமே
எண்ணிய விடந்தன்னில் நண்ணிய பாதா (ஜய ஜய)

எண்ணிய பக்தன் தன்னுளமர்ந்திடு
தன்மையே வாய்ந்த தற்பா நாதா (ஜய ஜய)

சூலமும் பாசமும் சீர்சிரத் தொடையொடு
சேயித பாகனைச் சேபுளம் வா வா (ஜய ஜய)

சாலோக்ய சாமீப்ய சாரூப்ய சாயுஜ்யம்
சாதுக்கள் சார்ந்திட சாதகம் நீயே (ஜய ஜய)

---

இராகம்-ஸௌராஷ்ட்ரம் தாளம்-ஆதி.

நிர்வாண ரூபனுக்கு நித்யஜய மங்களம் (நிர்வாண)

நாரதாதி முனிகளண்டு
நாமரூப மற்றநாத (நிர்வாண)

சிவயோக சாரமுற்ற
ஸ்ரீவடுகா னந்தனுக்கு (நிர்வாண)

சிவபக்தா பீஷ்டவரத
சிவசக்தி ஸ்வரூபனுக்கு (நிர்வாண

சிரமாலையொ டரவுமணி
சீர்சிறக்கும் மார்பனுக்கு (நிர்வாண)

பவவினைகள் போக்கும் ஜோதி
பாதார விந்தனுக்கு (நிர்வாண)

பரமனுரு மாறிவந்த
பக்தபரி பாலனுக்கு (நிர்வாண)

மார்க்கண்ட பக்தகோடி
மாவிதய வாசனுக்கு (நிர்வாண)

கொடுங்கிரியை யடக்கித்திரு
சூலதீர்த்த மீய்ந்தோனுக்கு (நிர்வாண)

திருசூல தீர்த்தமீய்ந்த
திருசூலத் திருமுனைக்கு (நிர்வாண)

ஆபதுத்தா ரணன்போற்றும்
ஆதிபைரவா னந்தனுக்கு. (நிர்வாண)

---

ப்ரான்மலே வாசனுக்கு பைரவா னந்தனுக்கு
பரமகல் யாணனுக்கு மங்களம்

உக்ரகி ரீசனுக்கு உண்மைப்ர காசனுக்கு
உட்குகை வாசனுக்கு மங்களம்

அன்னையபிர் தேஸ்வரிக்கு ஜயமங்களம்
அவ்வுக்ர கிரீசனுக்கு சுபமங்களம்

பார்வதிலோலனுக்கு ஜயமங்களம்
பாலசுப்ரமண்யனுக்கு சுபமங்களம்

ஸ்ரீமங்கை பாகருக்கு ஜயமங்களம்
சத்குருபைரவ மூர்த்திக்கு சுபமங்களம்

நந்திகேஸ்வரனுக்கு ஜயமங்களம்

ஆனந்தபைரவ ஆனந்தபைரவ ஆனந்தபைரவ ஆனந்தா
ஆனந்தபைரவ ஆனந்தபைரவ ஆனந்தபை:வ ஆனந்தா

---

ஸ்ரீ பைரவ நாம ஸ்மரணம் (ஜய ஜய பைரவா)

---

ஓம் தத் ஸத்

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 5 | 29 | சுந்கார் | சுந்கரா |
| 8 | 6 | பைாவ | பைாவு |
| 13 | 22 | முறனை | முறணை |
| 25 | 11 | சாயஜ்ய | சாயுஜ்ய |
| 27 | 15 | முண்டக்கு | முண்டாக்கு |
| 28 | 21 | வநதுளம | வந்துளம் |
| 30 | 15 | செய்முன் | சேய்முன் |
| 33 | 12 | திடுக்கன் | திடுக்கண் |
| 34 | 15 | மாயைச | மாயையைச் |
| 35 | 5 | ன ஹுகாரிதனை | ன ஹுகாரிதனை |
| 35 | 7 | னனிதாயுல | னினிதாயுல |
| 36 | 11 | லறிவிழிக்கும் | லறிவிழக்கும் |
| 42 | 8 | எகிஞ்ச | எகிஞ்ச |
| 45 | 17 | ரண ஞு | ரண நு |
| 46 | 20 | பாரதனே | பாரதேனே |
| 47 | 4 | மூழ்க | மூழ்க |
| 49 | 23 | வாதழிய | வாழிதய |
| 55 | 2 | ஆஞதியும் | அஞதியும் |
| 56 | 19 | வந்கதி | வந்கித |
| 63 | 5 | குல | சூல |
| 68 | 24 | விண்டேனே | விண்டனே |

ஆவணக்காப்பக நூலகம்
180255
சென்னை-600 008